Poovarasu

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று



வைகாசி ~ஆனி 2004

**கவிஞர். த.சு .மணியம் அவர்களின்**

ஓர் ஆத்மாவின் இராகம்

**கவிதைநூல் வெளியீட்டு விழாவிலிருந்து....**




இலக்கியச்செம்மல் இந்துமகேஷ் வெளியீட்டுரை ஆற்றிக்கொண்டிருக்கிறார்.
அருகில் பத்திரிகையாளர் வீ.ஆர். வரதராஜா, கவிஞர் வண்ணை தெய்வம், நூலாசிரியர் கவிஞர் த.சு. மணியம் ஆகியோர்.



நூலாசிரியருக்கு பொன்னாடைக் கௌரவம்.
அருகில் நிகழ்ச்சி அமைப்பாளர் ரவி மாஸ்ரர்

# உலகமே நம் இல்லம்
# உள்ளமெல்லாம் நம் சொந்தம்


## பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று
14வது ஆண்டு

**Poovarasu**

**Tamilische Literatur Magazin**

இதழ்: 87
வைகாசி -ஆனி 2004
Mai - Juni 2004

வெளியீடு:
பூவரசு கலை இலக்கியப் பேரவை
ஜேர்மனி

ஆசிரியர்:
**இந்துமகேஷ்**



முகவரி:
Poovarasu
Kultur und Literatur Organisation e.V.
Postfach 10 34 01
28034 Bremen
Germany

தொலைபேசி - தொலைநகல்:
0421 / 59 70 822

மின்னஞ்சல்:
Poovarasu_Germany@hotmail.com


### இந்தமலரின் இதழ்கள்...


பாரதி
வீ.ஆர்.வரதராஜா
க.குணதீசன்
ஜெயவதி எட்மன்
தாமரா சுப்பிரமணியம்
கொற்றையூர் வாசன்
இ.சம்பந்தன்
ரவி செல்லத்துரை
மகேந்தி
பொ.கருணாகரமூர்த்தி
அம்பலவன் புவனேந்திரன்
கோசல்யா சொர்ணலிங்கம்
வேதா இலங்காதிலகம்
சில்லையூர் சிங்கராயர்
சுந்தராம்பாள் பாலச்சந்திரன்
மதனி ஜெக்கோனியாஸ்
மீனா சிவலிங்கம்
இணுவை சக்திதாசன்
எழிலன்
இந்துமகேஷ்
அழகுக்கோன்

# வாச(க)மலர்கள்

பூவரசு நாவரசுகளின் தரிப்பிடம்
பூவரசு தமிழச் சோலை இலக்கியம்
பூத்திட்ட பதினான்கு அகவையில்
பார்த்தேன் அருமருந்தன்ன
தமிழ்மரம்

ஊன் நெகிழ்ந்தது ரசனையில்
நான் மகிழ்ந்தேன் உண்மையில்
தேன்புகழ் தமிழ் இலக்கியம்
வான்தொட புலத்தில் உயரட்டும்
தேன்மொழித் தமிழ் செழித்திட
கூன்விழாத் தமிழ் நிலைத்திட.
தன்னலமற்ற சேவை மனம் நிலைத்திட
என்றும் வாழ்க நிலைத்து உயர்க!

**வேதா இலங்கா திலகம்.**
(டென்மார்க்)

ஏழ்கடல் தாண்டி தமிழன்
ஏக்கம் தீரவைத்த பூவரசே!
ஏணியாக தமிழை
ஏற்றங் காணவைத்த சிற்றிதழே
கோடி முற்றவழகு
தந்த குடைநிலவே
கோணலில்லா நற்றமிழ்
தந்த புல மயிலே

எண்ணற்ற இலக்கிய
கலைஞர்களைப் படைத்து
இணையற்ற நற்புகழில்
திளைத்த இலக்கிய இதழே

ஈரேழகவையில்
தடம்பதித்த மலரே
இணையற்ற புகழ்
பூத்த பூவரசே

வாழ்க உன்புகழ்
வளர்க நற்பணி!

**இணுவை சக்திதாசன்**
(டென்மார்க்)

## காதலாகி
### கசிந்து கண்ணீர் மல்கி...

பூவரசு ஆசிரியர் திரு. இந்துமகேஷ் அவர்கள் எழுதிய காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி.. என்ற ஆன்மீகக் கட்டுரைகள் அடங்கிய நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. சாதாரண பாமரரும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் பக்குவமாக தனது கருத்தை தெளிந்த நீரோட்டம்போன்று நகர்த்தியுள்ளார். ஆன்மீகத்தின் அடிப்படைத் தத்துவங்களை மிக இலகுவாக்கி புரியவைத்திருப்பது அவரது இலக்கியத் திறமைக்கு மேலும் ஒரு நற்சான்றிதழ்தான்.

முக்தி நிலையில் இருந்த வண்ணம் கடவுளைத் தேடாமல் காதல் நிலையில் இருந்தபடி கடவுளைக் காட்டியுள்ளார். கருத்தை வலியுறுத்த ஆங்காங்கே பல உதாரணங்களையும் புகுத்தி வாசிப்பவர்களின் சிந்தனையைத் தூண்டியுள்ளார்.

அரைகுறை வேக்காட்டு நிலையில் இல்லாமல் ஆழமாகத் தன் கருத்தை வலியுறுத்தி ஆன்மீகத்தின் அடித்தளத்துக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார்.

மேலும் இவரது ஆன்மீக ஆக்கங்கள் வெளிவரவேண்டும் அவைகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

**-த. சு. மணியம்**

இலக்கியச்செம்மல் இந்துமகேஷ் அவர்கள் எழுதி வெற்றிமணி வெளீடாக வந்த வாழ்க்கையின் பெரிய பக்கங்களைக் கொண்ட ஒரு சிறுநூலாக காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி வெளிவந்துள்ளது. ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்விக்கும் நூலாக வெளிவந்திருக்கிறது.

காதல் என்று எல்லோருக்கும் தெரிந்த வாசகத்தை வைத்து ஆன்மீகத்தை வாரி வழங்கியிருக்கிறார். கலாநிதி கவிஞர் கந்தவனம் அவர்கள் குறிப்பிட்டது போல், பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு காட்டு விலங்குகளைப் பிடிப்பதுபோல் காதலை நீட்டிக் கடவுளைக் காட்டியிருக்கிறார் இந்துமகேஷ்.

ஆன்மீகத்தைப்பற்றிப் பலர் எழுதியிருந்தாலும்கூட ஆன்மீகத்தை அவர்களால் எழுதமட்டும்தான் முடிந்தது. ஆனால் இலக்கியச் செம்மல் அவர்களோ தன் இலக்கியத் திறமையை எழுதுகோல்கொண்டு தொட்டுக் காட்டியிருக்கிறார்.அழகான குட்டிக்கதைகளைப் போட்டு சுட்டிக் காட்டியிருக்கிறார். உன்னை நீ காதலி இறைவன் உனக்குள்ளேதான் இருக்கிறான் என்கிறார்.

பிறக்கும்போதே இறப்பையும் சுமந்து கொண்டுவந்த மனிதா நீ இறக்கும் போது எங்கிருந்து வந்தாயோ அங்கேதான் செல்லப் போகிறாய் என்று மரணபயத்துக்கு ஒரு தெம்பூட்டியிருக்கிறார்.

சாவு என்பது ஒருவகைத் தூக்கமெனில் தூக்கம் என்பதும் ஒருவகைச் சாவுதானே ஆகவே விழித்திருக்கும்போதுதான் நாம் வாழ்கிறோம் ஆகவே வாழும்வரை விழித்திருங்கள் என்கிறார்.

நமது உடலை எறிந்துவிட்டு உயிரைப் பிரித்துக்கொண்டு நாம் அந்த வானப் பெருவெளியோடு கலக்கும்போது மையம் என்று பெயர் பெற்றுவிடுவோம் அது அந்த வானப்பெருவெளியின் மையமாம். வானத்து மையப்பகுதியை ஒவ்வொருவரும் தொடுவோம் என்கிறார்.

பசி என்பது ஒரு ஒத்த உணர்வு அந்தப் பசியைப் போக்குவது உணவு அதுஎந்தவடிவத்தில் இருந்தாலென்ன பசிதீர்க்க உதவினால் போதும் அதுபோல இறைவன் எந்த வடிவத்தில் இருந்தாலென்ன என்று விக்கிரகங்களுக்கும் அதன் வடிவங்களுக்கும் அதாவது எல்லா மத எல்லா வடிவங்களையும் சுட்டிக் காட்டுகின்றார். மதபேதங்களைத் தாண்டி நின்று இறைவனைக் காட்டுகின்றார். பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நாயன்மார் நால்வரின் முக்தி பெற்ற வயதைக்குறிப்பிட்டு இன்னும் இறைவனைத்தேட எவருக்கும் வயது இருக்கின்றது காணலாம் காணுங்கள் என்று அழகாக எழுதியிருக்கிறார்.

இந்த இலக்கியத்திற்காக இந்துமகேஷ் அவர்களைக் காதலிக்கு முன் நம்மை நாம் காதலிப்போம்.

-நா. தேவதாசன்



## சும்மா ஒருக்கால் சொல்லவேணும்.

இது கணனியுகம்.
கொட்டிலுக்குள் இருந்துகொண்டு கோட்டையை அளவெடுப்பதுபோல் சிற்றிதழுக்குள் இருந்துகொண்டு திசையெங்கும் ஆக்கிரமித்திருக்கும் இணையத்தளத்தை எட்டிப் பார்ப்பதிலும் ஒருவகை ஆர்வம்.

வாழ்வோடிணைந்த எல்லாத் துறைகளுக்குள்ளும் வலம்வந்துவிட வழிவகுக்கின்ற இணையத்தளத்தோடு முற்றுமுழுதாய் இணைந்திருப்பதற்கு தனிமனித வாழ்வின் காலங்கள் வசதிசெய்யாவிடினும் அவ்வப்போது பலராலும் நுனிப்புல் மேய்தல் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது.அறிந்தது குறைவானபோதும் நாம் கண்டவற்றை கேட்டவற்றை கற்றுக்கொண்டவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது அறிவும் இரசனையும் விசாலமடைகிறது.

கணனியின் முன்னால் என் கைக்குள் சிக்கிக்கொண்டிருந்த எலியின் தலையில் விரலால்தட்டி, கண்ணாடித் திரைக்குள் குறிவைத்துத் தாக்கும் எலிவால் அம்பினோடு ஊடுருவிப் புகுந்து கண்ணெதிரே விரிகின்ற இணையத் தமிழ் இதழ்கள் சிலவற்றில் பார்வையைப் பதிய வைத்தபோது, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல்வேண்டும்! என்ற மகாகவிஞனின் கனவு நனவாக விரிய அதற்கென முழுமூச்சோடு உழைத்துவரும் படைப்பாளிகளின் முகங்களும் அவர்தம் திறமைகளும் அங்கே பரவிக்கிடக்கக் கண்டேன்.

அந்தக் கணத்தில்தான் என்னுள் ஒரு எண்ணம் எழுந்தது.
எல்லோரும் எல்லா இதழ்களையும் எல்லாப் பக்கங்களையும் பார்த்திருக்க முடியாது என்றாலும் பார்த்தவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு, பூவரசில் சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்டால் என்ன என்ற எண்ணம்.

இந்த இதழிலேயே ஆரம்பித்தாயிற்று.
**இணையத் தமிழ் இதழ்களிலிருந்து...** என்னும் தலைப்பிலமைந்த இந்தப் பக்கங்களில் நீங்கள் இணையத்தமிழ்ப் பக்கங்களில் இரசித்த- இரசிக்கும் இணையத்தமிழ் இதழ்கள்பற்றிய விபரங்களை, அவைபற்றிய உங்கள் கருத்துக்களை, அவற்றில் உங்களைக் கவர்ந்த அம்சங்களை சுருக்கமாக எழுதி பூவரசுக்கு அனுப்பி வையுங்கள். தொடர்வோம்!

அன்புடன்
உங்கள்
இந்துமகேஷ்

(எதற்கும் ஒருக்கால் 56ம் பக்கம் வாருங்கள்...)

பூவரசு 13வது ஆண்டுநிறைவு
சிறுகதைப்போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற சிறுகதை

# தேகத்தைச் சாய்த்துவிடு அல்லாலதில் சிந்தனை மாய்த்து விடு.



*இதயம் கலங்கும்*
*இமைகள் மழைமூடும்*
*சிறகு விரித்துச் சென்ற*
*பறவை நினைவில் எழும்*
*மண்ணில் சேர்ந்த சதைக் குவியல்*
*கண்ணில் வந்து ஒட்டிக்கொள்ளும்.*
*இரவுகள் எல்லாம் நிலாவெளியினிலே*
*கனவுகளோடு உறக்கம் தொலையும்.*
*மனக்காயம் சுமந்த காயமும்கூட*
*காற்றொடு கரைந்திடும் கணங்களுக்காக*
*காத்திருத்தலும் கனமாய் சுகமாய்...*

"இஞ்சாருங்கோ இஞ்சாருங்கோ என்னைப் பாருங்கோவன்.."

-ஆழ்ந்த உறக்கத்திலிருந்த என்னைத் தட்டி எழுப்பிய செல்லத்தின் முகத்தைப் பார்க்கிறேன்.

கண்களைக் கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தவுடன், "எனக்குப் பசிக்குதப்பா... நான் வடிவாகச் சாப்பிட்டு எத்தனை நாளாகுது தெரியுமே..? வீட்டில என்ன சாப்பாடு இருக்குதப்பா?" என்றவள் கண்கள் கலங்குகின்றன..

"அய்யோ செல்லம்... இந்த நேரத்தில வந்து பசியென்கிறாயே.. இப்ப சாப்பாடு ஒன்றும் இல்லையே!" என வருந்துகிறேன்.

"எனக்கு பசி தாங்கமுடியவில்லை. இந்தாங்கோ இதைக் கொண்டுபோய் வித்திட்டு என்றாலும் அரிசி வாங்கி வந்து எனக்குச் சமைச்சுத் தாங்கோப்பா" என்றபடி என் கைகளுக்குள் தன் தாலிக்கொடியை வைக்கிறாள் என் மனைவி. துடித்துப் போனவனாய், "செல்லம்!" என அலறுகிறேன்.

-பாரதி

"அய்யா முருகேசய்யா. ஏன்னய்யா கெட்ட கனவேதும் கண்டீங்களா? நித்திரையில கத்துறீங்களே!"
பக்கத்துக் கட்டிலில் இரவுமுழுக்க இருமலுடன் போராடிக்கொண்டிருந்த மணியத்தார் என்னைப் பிடித்து உலுக்கவும் அதிர்ச்சியுடன் எழுந்து, "மணியண்ணை இன்றைக்கு என்ன திகதி?" என்கிறேன்.
"கார்த்திகை பத்து அய்யா!" என்றவரிடம், "மணியண்ணை கார்த்திகை பத்து என்மனைவி என்னைப் பிரிந்து சென்ற நாள். அவளின்ரை விருப்பப்படி வசதியற்ற நூறுபேருக்கு சாப்பாடு போட இந்த வருசம் எனக்கு வசதியில்லாமல் போயிட்டுதே என்ன செய்யலாம் என்று கவலைப்பட்டுக்கொண்டு உறங்கினேன். செல்லம் கனவில் வந்து வழிகாட்டிவிட்டுப் போகிறாள்!" என்றபடி சுவர்க் கடிகாரத்தைப் பார்க்கிறேன்.
அதிகாலை மணி இரண்டு.
இந்த மாரிக் குளிருக்கு ஒரு தேநீர் குடித்தால் இதமாக இருக்கும்போல ஏங்கும் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு திரும்பவும் கட்டிலில் உறங்க முயல்கிறேன்.
மனமோ கடந்த காலத்தை புரட்டிப் புரட்டிக் கண்முன் நிறுத்தி உறக்கத்தை துரத்தி விரட்டிக்கொண்டிருந்தது.

வலிகாமம் வடக்கில் மயிலிட்டியைக் கிராமசபையாகக் கொண்டு அமைந்த அழகான கிராமம் குரும்பட்டி. சிவந்து சிரித்த செம்மண் வளம் ஊருக்கே தனிச்சிறப்பு.
வசதியான குடும்பத்தில் பிறந்து வாழ்வின் ஒவ்வொரு கணங்களையும் மகிழ்வுடன் அனுபவித்து வந்த காலம் அது.
அப்போதெல்லாம் பாடசாலைக்குப் போகும் நாட்களில் உடுப்புத்தோய்க்கும் கல்லில் குதிக்கால்களைப் போட்டு உரஞ்சி உரஞ்சி தேய்த்த அந்தச் செம்மண் நிறத்தைப் போக்கப் படும்பாட்டை நினைத்தால் இப்பவும் சிரிப்பு வரும். அல்லது காலின் நிறத்தைப் பார்த்தே செம்பாட்டார் என்று கேலி செய்வார்கள் ஆனால் பிறகு படித்து கொஞ்சக் காலத்தில் ஆசிரியராகப் பதவிகிடைத்து திருகோணமலைக்குச் சென்று வாழத் தொடங்கியபோது என் பாதங்களில் செம்மண் படாதா என்று ஏங்கிய காலம்தான் கூடுதல் ஆனதாய்.

படிப்படியாக திருகோணமலையின் அழகும் என்னைக் கவரத்தொடங்க ஆசிரியத் தொழிலும் மனசுக்கு உற்சாகம் ஊட்ட ஊர்சுற்றிப் பார்ப்பதில் பொழுது கழிந்தது. இராவணன் சீதையைக் கவர்ந்ததனால் அவனைக் கெட்டவனாக நினைத்திருந்த என் மனசு தன் தாய்மீது கொண்ட பாசத்தினால் கோணேசுவரர் ஆலயத்தையே தூக்கிச் செல்ல முனைந்து மலையையே வெட்டிய அடையாளம் கண்டதும் அவன்மேலிருந்த அபிப்பிராயம் கொஞ்சம் மாறியதாய்.
அருகருகே இருந்த ஏழுகிணறு அற்புதமும் அதிசயமானதாய்.

வருடங்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன.
இளமைப்பருவத்துக்கே உரிய காதல் நோய் என்னையும் தொற்றிக்கொண்டது.
நானிருந்த பக்கத்துவீட்டில் சங்கீத ஆசிரியையாக இருந்த செல்லம்மாவுடன் கதைப் புத்தகங்கள் சங்கீத கசெட்டுகள் பரிமாறுவதில் ஆரம்பித்த நட்பு நாளடைவில் மெல்ல காதலாக அரும்பத் தொடங்கியிருந்தது.
பின்பு இருதரப்பு பெற்றோரின் ஆசியுடன் திருமணத்தில் முடிந்தது.
இனிய இல்லறத்துக்குச் சாட்சியாக அடுத்தடுத்து ஆண்மக்கள் மூவரைப் பெற்றெடுத்தாள் செல்லம். ஆனாலும் அடிக்கடி கவலையுடன், 'எங்களுக்கு ஒரு பெண்பிள்ளையை ஆண்டவன் தரவில்லையே!' என்பாள்.

'ஒன்றுக்கு மூன்று ஆண்பிள்ளைகள் இருக்க இன்னும் அழுகிறாயே!' என்றால், 'இல்லையப்பா பெண்பிள்ளைதானப்பா எங்கட முதுமைக் காலத்தில தண்ணிவெந்நி வைச்சுத் தந்து எங்களைக் கவனிக்கும்!' என்பாள்.
செல்லம் சொன்னதை இப்ப அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன்.
குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் மெல்ல மெல்ல நாட்டின் அமைதி கலையத் தொடங்கி இருந்தது.

பாடசாலையின் நீண்ட விடுமுறை நாளொன்றில், பிறந்த தவழ்ந்து வளர்ந்த என் மண்ணில் தம்பியை அணைத்தபடி ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஒரு அதிகாலை வேளையில் பயங்கரமான சத்தங்கள். வீட்டுக்கூரை அதிர்ந்து சிதறிவிழ கூடவே குண்டுகளும் சேர்ந்து வெடித்தன.
யாழிசை தவழ்ந்த மண்ணில் வாள்கொண்டு வந்து பாழ்படுத்திய பேய்களின் பயங்கரம் பெரிதாகிப் படர்ந்த காலம் அது.
பலாலியில் இருந்த விமான நிலையம் புக்காராவும் சுப்பர் சொனிக்கும் வந்திறங்க வசதியாக இருந்ததினால் வேகமாகப் பாதிக்கப்பட்டதில் என் கிராமமும் ஒன்றாக.
ம்.. நடந்ததெல்லாம் கனவாக இருக்கக்கூடாதா?
மனசு ஏங்கிக் கொண்டிருக்க நடைப்பிணமானேன்.

நடந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் தவித்தேன்.
வாழ்வின் அர்த்தம்புரியாத புதிராக நாட்கள் நகர்ந்தாலும் சிதறித் துண்டான சதைக் குவியல்களாகயிருநத அம்மா அப்பா தங்கையும் கால்களை என்மீது போட்டபடி கைகளால் கழுத்தைக் கட்டியபடியும் இருந்த தம்பியின் தலையில்லாத உடம்பும் கண்களில் இருந்து கலையவேயில்லை.

துயரமே வாழ்வாகிப்போன அந்த நாட்களில் மாணவர்களின் அன்பு எனக்கு அருமருந்தாயிருந்தது. சோகங்களைப் பகிர்ந்துகொள்ளும் உறவான செல்லம்மாவின் அன்பும் பட்டுப்போன மரமாயிருந்த என்னைத் துளிர்க்கச் செய்தது எனலாம்.
மெல்ல மெல்ல வாழ்க்கை உருண்டு கொண்டிருந்தது.

பெரும்பான்மை இனத்துக்கும் சிறுபான்மை இனத்துக்கும் இடையிலான போராட்டம் தீவிரமடைந்து தமிழர் வாழ்ந்த இடங்களெல்லாம் தேடி அழிக்கப்பட்டு வந்த கொடுமையான காலம். 1989ம் ஆண்டு.
பாடசாலையில் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தேன்.
பக்கத்திலிருந்த வீதியெங்கும் அழுகுரல்கள். வெடிச்சத்தங்கள்.
பயமும் பதட்டமுமாக இருந்த மாணவர்களை அமைதிப்படுத்தி வெடிச்சத்தங்கள் ஓயும்வரை காத்திருந்தோம்.
சுமார் நாலுமணி நேரத்தின்பின் ஜீப்வண்டிகள் பேரிரைச்சலுடன் புறப்பட்டுப் போனபின் மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பிவிட்டு வெளியேறினோம்.

வீதியெங்கும் இரத்தக்கறைகளும் ஏழெட்டு இறந்த உடல்களுமாயிருக்க நாதியற்றுப் போன நம்மினத்தின் துன்பம் என்று அகலுமோ என்ற வேதனையுடன் வீட்டை அடைந்தபோது செல்லம் விம்மியழுது கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் அழுகை உச்சஸ்தாயியை அடைந்தது.
'செல்லம் என்ன.. என்ன நடந்தது? ' பதறினேன்.
'அப்பா தம்பி சேரன் இயக்கத்துக்குப் போய்விட்டானப்பா இந்தாங்கோ அவனது அறையில் இருந்த கடிதம்!' என்று கையில் தந்தான் மூத்தவன் சோழன்.

மௌனமாக படித்து முடித்தவுடன் 'செல்லம் இப்படி ஒரு வீரமகனைப் பெற்றதற்காக நீ பெருமைப்படு. இன்று நாடிருக்கும் நிலையில் வீட்டுக்கு ஒருவராவது நாட்டைக் காக்கும் பணிக்காக கட்டாயம் செல்லவேண்டும் அழாதே!' என்று அவளைத் தேற்றினாலும் என் மனதும் ஓர் மூலையில் வலித்தபடியே.

அன்று மதியம் நடந்த கலவரத்தால் நகரமே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்க அன்றிரவு 6மணியிலிருந்து காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம்போட்டிருந்தார்கள். சட்டம் போட்டுவிட்டு தமிழ்ச் சந்ததியையே அழிக்க சபதம் பூண்டவர்களாக 7 மணியளவில் லாரிலாரியாக வந்திறங்கி, 'பயங்கரவாதிகள் ஒளிந்திருக்கிறார்கள் அவர்களைப் பிடிக்கப்போகிறோம்' என்று சொல்லிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கத் தொடங்கினார்கள்.

வீடுகளைவிட்டு பிள்ளைகுட்டிகளுடன் பீதியைச் சுமந்தபடி ஓடிய மக்களோடு நாங்களும் ஓடினோம். எந்தத் திக்கில் எங்கே என்பது தெரியாமலே ஓடி அயல் கிராமமான நிலாவெளியை அடைந்தோம். அங்கிருந்த அரிசி ஆலை ஒன்றுக்குள் போனபோது காற்றே நுழைய முடியாத அளவுக்கு மக்கள். திரும்ப வெளியேறி அருகிலிருந்த ஆலயம் ஒன்றின் வெளிமண்டபத்தினருகே பெரிய மரத்தின் கீழ் பீதியுடன் பேச்சற்று இருந்த மக்களோடு சேர்ந்து நின்றோம்.

நடுநிசி ஆகியிருக்கும் களைப்பு திகைப்பு எல்லாமும் சேர்ந்து நிலத்திலேயே கண்ணயர்ந்து கொண்டிருந்த நேரம். திடுமென செல் வானத்திலிருந்த மழை பொழிவதுபோல கொட்டியது. அலறியபடி ஓடியவர்களும் குழந்தைகளின் அழுகுரல்களுமாக அந்த இடமே புகைமண்டலமாக அதிர்ச்சியில் உறைந்து போனோம்.
அரிசி ஆலையை நோக்கிப் பறந்த பல செல்களின் பயங்கரச்சத்தம் காதுகளையே செவிடாக்கி விடும்போல இருந்தது. சத்தம் ஓய்ந்தபின் ஆண்கள் எல்லோரும் ஓடிச்சென்று பார்த்தபோது இரத்த ஆறு பாய துடிதுடித்தபடி இருந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று மரண விளிம்பில் இருந்து ஈனக்குரல் எழுப்பியவர்களுமாக குவிந்திருந்த மக்களில் யார் இறந்தவர் யார் காயப்பட்டவர் எதுவுமே தெரியாத நிலை. இருள் வேறு. ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் இரத்தக்கண்ணீர் வடித்தபடி திரும்பினோம்.
சில மணியின் பின் பயங்கரமான அந்தக் காலை அழுதபடி விடிந்தது.
50 பேர் இறந்திருந்தார்கள் 40 பேருக்குமேல் காயங்களுடன்.
திருகோணமலையே சோகத்தில் ஆழ்ந்திருந்தது.
ஊரடங்குச் சட்டம் வீதியே வெறிச்சென்றிருக்க இயக்கப் பிள்ளைகளுடன் எஞ்சிய தமிழர்களும் சேர்ந்து மாட்டுவண்டிகளில் அந்த 50 உடல்களையும் ஏற்றி பாய்களால் மூடியபடி இடுகாட்டை நோக்கிப்போன அந்தக் கோலம்...
ஓ..என்னுடல் எரியும்போதுதான் அந்த நினைவும் கருகுமோ?!

செல்லமும் அதிர்ச்சியிலிருந்து விடுபட நீண்ட நாட்களாயின.
கருவில் சுமந்த கண்மணிகள் காயமின்றித் தப்பியதற்காக கடவுளுக்கு நன்றி சொன்னவள், 'இஞ்சாருங்கோ இனியும் பிள்ளையளை இங்கு வைத்திருக்கிறது நல்லதில்லை. உடனேயே வெளிநாட்டுக்கு அனுப்புவோம்' என்று பிடிவாதமாக நின்றாள். ஒருவாறு இருந்த வீடுவாசல் காணிகளை விற்று பிள்ளைகள் இருவரையும் வெளிநாட்டுக்கு அனுப்பியபின் திருக்கோணமலையிலும் இனித் தமிழர்கள் வாழமுடியாது என்ற நிலையில் திரும்ப யாழ்ப்பாணத்துக்கே சென்று சுன்னாகத்தில்

வீடெடுத்து வாழத் தொடங்கினோம். நாடே நலிவுற்றிருக்க நாமும் உடலால் மட்டுமல்ல மனசாலும் தளர்ந்திருந்தோம்.
மகன்மாரின் கடிதங்களே எங்களை வாழவைத்துக் கொண்டிருந்தன.
வருடங்கள் செல்லச்செல்ல வயதான பெற்றோரின் நினைவும் பிள்ளைகளிடம் குறையத் தொடங்கியது பெற்றவர்களை பாரமாக நினைத்து எந்தவிதமான தொடர்பும் இன்றி விலகிக் கொண்டார்கள்.

செல்லம்மா உடைந்துபோனாள்.
பிள்ளைகளைப்பற்றியே நினைத்து நினைத்து நோயாளியாகிப் போனவளை ஒரு குழந்தைபோலக் கவனித்து வந்தேன்.
கண்ணீருடன் கழிந்த அவள் வாழ்வும் ஒருநாள் கரைந்துபோனது.
சரியான கஸ்டப்பட்டு பிள்ளைகளுக்கு அறிவித்தவுடன் அவர்கள் தங்களைப் பார்க்கவேண்டாம் தகனம் செய்துவிடவும் என்று சொல்லிவிடவும் வேறுவழியின்றிக் காரியங்களை முடித்தேன்.

கருவோடு சுமந்து கண்ணுக்குள் காத்தவளையே கலங்கவைத்தவர்கள் என் மரணம்வரை பார்ப்பதில்லை என்ற முடிவுடன் கடைசியாக இருந்த செல்லம்மாவின் சீதனக் காணியொன்றை கைதடி ஆதரவற்றோர் நிலையத்துக்கு எழுதி வைத்துவிட்டு அங்கேயே என் எஞ்சிய காலத்தைக் கழிக்கத் தொடங்கினேன்.

இந்த வருடம் செல்லம்மாவின் ஆசையைப் பூர்த்திசெய்ய கையிலுள்ள காசு காணாதே என்ற ஏக்கத்துடன் இருந்த எனக்கு கனவில் வந்து வழிகாட்டிச்சென்ற செல்லத்தின் எண்ணப்படி, காலையில் எழுந்தவுடன் மனைவியின் தாலிக்கொடியைக் கொண்டுபோய் விற்றுவரவேண்டும் என்ற நினைவுடன் மீண்டும் நித்திரைக்குத் தயாராகிறேன்.

□□□

பூவரசு 13வது ஆண்டுநிறைவுப் போட்டிகளில்
மூன்றாவது பரிசுபெற்ற
**சிறுகதை, கவிதை, கட்டுரை**
**அடுத்த இதழில்!**

# உலகத் தொழிலாளரின் உன்னதத் திருநாள்

அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உயிர்கள்பறிக்கப்பட்ட உலகத் தொழிலாளர்கள் தமது வீர தீரம் மிகுந்த போராட்டத்தின் வழியாக தமது உரிமைகளை வென்றெடுத்த நன்னாளையே மேதினப் பொன்னாளாக சர்வதேசத்தின் சர்வ மக்களாலும் ஆண்டு தோறும் உணர்ச்சி பொங்கும் எழுச்சி தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

1827ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரக் கட்டடத் தொழிலாளர்கள் பத்துமணிநேரம் மட்டும்தான் வேலை செய்வது என்ற கோரிக்கையை முன்வைத்தனர். தொடர்ந்து 1834ஆம் ஆண்டு இதே கோரிக்கையை முன்வைத்து நியூயோர்க் நகரில் ரொட்டித்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் ஒருநாளில் 18முதல் 20மணிநேரம் கட்டாய வேலை செய்யவேண்டியிருந்தது. பல தடவை போராடியதன் பின்னர் அவர்களது போராட்டத்தின் பயனாக 1937ஆம் ஆண்டு வேலை நேரம்10மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டது. தொழிலாளர்கள் தமது முதற் போராட்டத்தில் வெற்றிபெற்றனர்.

---

–சில்லையூர் சிங்கராஜா

தொழிலாளர்கள் சக்தியின்முன் முதலாளிகள் மண்டியிட வேண்டி வந்தது. உலகம் தனதுபாதையில்ஒரு வரலாற்றுத் திருப்பத்தைக் கண்டது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து பல நாட்டுத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தமது வேலைநேரம் ஒருநாளுக்கு 8மணித்தியாலமாகக் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். மேல் நாடுகளில் இக்காலப் பகுதியில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சி இதற்குத் துணையாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் 8மணி நேர வேலை என்ற கோரிக்கை பெரும் இயக்கமாக மாறி மேதினம் தோன்றுவதற்கு அடிப்படையான காரணமாகவும் இது அமைந்தது.

1866ஆம் ஆண்டு தேசிய தொழிற்சங்கத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. அதில் தொழிலாளர் பிரதிநிதிகளால் மிகமுக்கிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜெனோவாவில் கூடிய சர்வதேச காங்கிரஸ் வேலைநாளுக்கு சட்டபூர்வமான அளவு முதல் தேவையாகும். அது இல்லையெனில் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னேற்றமோ விடுதலைக்கான முயற்சியோ முழுமையடைய மாட்டாது. ஆகவே வேலை நாளின் சட்டரீதியான அளவு 8மணி நேரமாக இருக்கவேண்டும் என இந்த மாநாடு முன் மொழிகின்றது என்று தனது தீர்மானத்தை விரிவாக விளக்கிக் கூறியது. இதேவேளை 8மணிநேர இயக்கம்பற்றி கார்ல்மார்க்ஸ் 1867ஆம்

(தொடர்ச்சி 54ம் பக்கம்)

# அன்புள்ள தம்பிக்கு...

எங்கே சில மாதங்களாக என்னிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை என ஆவலாகக் காத்துக் கொண்டிருப்பாய் என்பதை நான் அறிவேன்.
உன்னிடமிருந்து வந்த கடிதங்கள் இங்கு ஏராளமாகவே என் பார்வைக்கு வந்தன. நாடு நாடாகப் பறந்ததில் மாதங்களும் கடந்துவிட்டன.

சிங்களம் எம்மை மீண்டும் ஏமாற்றிவிட்டது பார்த்தீர்களா? என்றுகேட்டு நீ அங்கலாய்ப்பது உன் கடிதத்தில் தெரிகின்றது. ஆனாலும் இம்முறை ஏமாற்றமடைவது நாமல்ல என்பதை நாளடைவில் நீ புரிந்துகொள்வாய்.
பேச்சுவார்த்தை நடந்து வடக்கு கிழக்கு மாகாண தனி நிர்வாக அலகு புலிகளினால் கொடுக்கப்பட்டபோது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலும் வைக்கப்பட்டது.
அதில் ஜே.வி.பி கூட்டணியாகச் சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசுதான் தொங்கு பாராளுமன்றம் ஒன்றை அமைத்து பதவிக்கு வந்துள்ளது. ஆனால் அந்தப் பாராளுமன்றம் எவ்வளவு நாட்கள் தாக்குப்பிடிக்கும் என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு என்பதெல்லாம் நீ அறிந்த விடயமே.

முன்னைய ரணில் அரசின் சமாதான நடவடிக்கையை தரக்குறைவாக எடைபோட்ட ஜனாதிபதி சந்திரிகா அரசு திடீரென தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள் எனக் கூறியதுடன் நில்லாமல் நோர்வே நாட்டின் நடுவணை விரும்பாமலிருந்தவர் நோர்வேயை சமாதானத்திற்கென அழைத்தார். அதுமாத்திரமல்ல தனி நிர்வாக அலகை முன்வைத்து பேச்சு வார்த்தை நடாத்தப்படும் என புலிகள் அறிவித்ததும் அதனையும் ஏற்றுக்கொண்டார் சந்திரிகா. இத்தனை ஆர்வம் ஏன்? தமிழ்மக்கள்மீதுள்ள அன்பினாலா அல்லது நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்ற உறுதியினாலா? அல்ல.

நாடு இன்னுமொரு யுத்தத்தை தாங்காது என்பதை சந்திரிகா அறிவார்.
அத்துடன் வெளிநாட்டு நிதி உதவிகள் கோடிக்கணக்கில் வாசல்வரை வந்து நிற்கின்றன. நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே இந்த நிதி நாட்டினுள் வரும். இல்லையெனில் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுவிடும். இதுதான் சந்திரிகாவில் ஆர்வத்திற்கு முக்கிய காரணம்.
ஆட்சி ஐக்கியதேசியக் கட்சிக்குக் கைமாறக்கூடாது ஆட்சி அதிகாரத்தை தப்ப வைத்துக்கொண்டு அரசியலமைப்பை மாற்றி ஜனாதிபதி அதிகாரத்தை அகற்றி பிரதமராக மீண்டும் போட்டியிட்டு தெரிவாகவேண்டும். ஏனெனில் அடுத்த வருடத்துடன் அவர் ஜனாதிபதியாக மீண்டும் போட்டியிட முடியாது என அரசியலமைப்புச் சட்டம் தெரிவிக்கின்றது.

*இத்தனை திட்டங்களையும் மனதினில் போட்டுக்கொண்டு அரசியல்காய்களை நகர்த்த முற்படுகிறார் சந்திரிகா.- அதற்காக எங்கள் பிரச்சனையையும் தலைமேல் வைத்துக்கொண்டு இருப்பதாக ஒரு நடிப்பு.*

*தென்னிலங்கை அரசியலமைப்புப்பற்றி எமக்கு அக்கறையில்லை. ஆனாலும் எம் விடயத்தில் நாம் உறுதியாக நிற்கவேண்டும். எமது தேசியத் தலைவருக்கும் போர்க் கலங்களை மாத்திரமல்ல அரசியல் தளங்களையும் காய்களாக நகர்த்தும் வல்லமை உண்டு என்பதை உலகமே அறியும். ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த விளையாட்டு அவருக்கம் நன்கு தெரியும். ஏற்கனவே சந்திரிகா தமிழினத்தை ஏமாற்றியுள்ளார்.*
*புலிகளை ஏமாற்றினால் என்ன நடக்கம் என்பதை அனுபவப் பூர்வமாக அறிந்தவர்அவர். சமாதானம் முறிந்தால் சண்டை துவங்கும். அதனை அந்த நாடு தாங்குமா?*
*சமாதானம் நழுவும் சந்தர்ப்பங்களே அதிகம் என நீ கருதலாம். ஆமாம் ஆனாலும் எமது தரப்பில் நியாயங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. சர்வதேச நீதிச் சக்கரத்தில் எமது நியாயங்களைச் சமர்ப்பித்தள்ளோம். உலகம் எம்மை பயங்கர வாதிகளாகக் கருதிய காலம்போய் நம் பக்கமும் நியாயம் இருக்கின்றது என்பதை அறியத் தலைப்பட்டுள்ளது.*
*இதுவரை காலமும் நாம் அனுபவித்த துன்பங்களுக்கெல்லாம் விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.*
*நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவரின் உறுதிமொழியின்பேரில் சமாதானத்திற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும் அதேவேளையில் அரசின் கூட்டணிக்கட்சியாகிய ஜே.வி.பி. நோர்வேயின் நடுவணை தாம் விரும்பவில்லை என்றும் இந்தியாவையே மூன்றாம் தரப்பாக ஏற்றுக்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.*
*இது ஒரு குழப்பமான சூழ்நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இதனை எப்படி சந்திரிகா சமாளிக்கப் போகின்றார்? சுமாதானப் பேச்சுவார்தை துவங்கினால்தான் வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கும். இந்தியா மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் மிகக்குறைவாகவே தென்படுகின்றது.*
*தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இப்போது மக்களின் ஆணை பரிபூரணமாகக் கிடைத்துள்ளது. அவர்களே வடக்கு கிழக்கு மாகாண மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என கடந்த பொதுத்தேர்தலின்போது 22 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ததின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.*
*அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத் திட்டத்தையும் தமிழ்மக்கள் ஆதரித்து வாக்களித்துள்ளனர்.*
*ஏனவே இம்முறை பேச்சுவார்த்தையின்போது புலிகளின்பலம் மேலும் அதிகரித்துள்ளது. அதனால்தான் ஜனாதிபதி சந்திரிகா இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தின்மீதே பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார் என்பதை எழுத்துமூலம் பெற்றுக்கொள்ள தேசியத் தலைவர் மிக உறுதியாக இருக்கிறார். இதுவும் நியாயம்தானே?*
*மீண்டும் சந்திப்போம்.*

அன்புடன் அண்ணன்
**வீ.ஆர்.வரதராஜா.**

# கவிதைப் பூக்கள்

## இறக்கை கட்டிய வயது.

ஐயிரு வயது
ஆடிப்பாடும் பருவம் அது
பாலர் வகுப்பு பாடங்கள்
தென்றல் போல
சுகமாக வருடிச் செல்லும்
மணல்மீது வீடு
கட்டச் சொல்லும் மனது

பெற்றோரின் அன்பு
தேடும் அந்த வயது.
கோயிலுக்குச் சென்றாலும்
கைகூப்ப நினைக்காது
துள்ளி ஓடி விளையாட
துடிக்கும் மனது

ஈரேழு வயது
தமிழ் மொழிக்குள்ளே
ஊறியது மனது
கனவிலும் நினைவிலும்
கல்வியின் காதலனாக
இருக்கும் வயது

ஈர்பத்து வயது
பூப்பூக்கும் மலரிற்குள்
கவி எடுக்கும் மனது
காதலித்தால்
வருடம் நிமிடம் என்று
நினைக்கும் மனது

நண்பர்களுடன்
அரட்டைபேசும் நேரம் அது
சுகமாக இருக்கும் அந்தநேரம்.
காதல் என்று வந்தால்
துடிக்கும் இதயம்
காதல் இல்லை என்றால்
மரணிக்க வைக்கும் அந்தநேரம்

பூக்களிடையே ரசிக்கத் தோன்றும்
உறவுகளுடன் வாழ நினைக்கும்
நண்பர்களிடையே நட்பைத்தேடும்
காதலிக்க உள்ளம் ஏங்கும்
இவை எல்லாம் நினைக்க
சுகமாக இருக்கும் மனது.

ஐபன்னிரண்டு வயது
அமைதி தேடும் வயது
எல்லோருடனும்
அன்பைக் காட்டும் மனது
உடல் ஓய்ந்துபோகும் வேளை
சிறுவயதின் சிற்றின்பம்
தென்றல்போல மனதை வருடும்
பிள்ளைகள் உறவுகளிடத்தில்
பாசம் தேடும்
இளமைப் பருவத்துக்
காதலை நினைக்கையில்
இறக்கை கட்டும் அந்த
முதுமை வயது.

-க.குணதீசன்

## முற்றத்து மரம்

முன்பனிக் காலத்தில்
முற்றத்து மரமொன்று
முழுதாய் இலை உதிர்த்து
பட்டையும் சொட்டையுமாய்
முதியதுபோலக் காட்சிதந்து
மூசிப்பெய்யும் மாசிப்பனியை
விரட்டியடிக்கக் காத்திருந்து
காத்திருந்த காலமதோ
பங்குனியைக் கண்டதுமே
மரம்முழுக்க பச்சிலைகள்
பால்பொங்கல் பொங்கியபோல்
இலை மறைக்க வெண்பூக்கள்
இயற்கைமகள் அழுத கண்ணீர்
இதயச் சுமை குறைக்கவென
அழைத்துச் சென்றனவே
அத்தனை பூக்களையும்

பூக்களைத்தான் அழைத்தனையோ
புத்துயிர் பெற்றுத்தான்
புதுப் பொலிவுடனே
காயாக நான்வந்தேன்
காயாகி வந்ததினால்
கனியாகி நின்றிருந்தேன்
நான் கனிந்த காரணத்தை
நன்கறிந்த பறவையினம்
நாட்கணக்காய் எனைச் சுவைக்க
தினம்தேடி வந்தனவே
பாட்டுக்கள் பல பாடி
பறவையினம் கூடி நின்று
பார்ப்பவர்கள் மனத்தை எல்லாம்
பசிகொள்ள வைத்தனவே
பசிகொண்ட பாமரனோ
நன்றியுடன் எனை எடுத்து
நல் உணவு ஆக்கிவிட்டான்
நான் மறைந்த பின்னும்
எனை ஈன்ற மரமதுவோ
அடுத்தாண்டு என் வரவை
எதிர்பார்த்து நிற்குதுவே.

-தாமரா சுப்பிரமணியம்.

## வெய்யிலுக்கு விண்ணப்பம்

ஆதவனே நீ
அருகில் இருந்தபோது
அருமை தெரியவில்லை உனது.
தீராத இருளில்
சிந்தை தீய்ந்தபோதே தெரிகிறது

என்றும் எப்பவும் வருகின்ற
ஆதவனாயல்ல
ஏதோ புதிதாய் புதுமையாய்

தாகமுள்ளவனுக்கே நீரின் அருமை
ஆதவா சில தாகங்க ளெமக்குண்டு
ஆறு மாதத்திற்காவது
சீராக அதைத் தீர்த்திடு.
தவணை முறையில்
சிரித்திருப்போம் நாங்கள்
நோயின்பெருக்கம் குறையட்டும்
நோயுற்றவர் குணம் அடையட்டும்
விற்றமின் 'டி'யாவது
விலையின்றிக் கிடைக்கட்டும்
இரத்த அணுக்கள்
விருத்தி யடையட்டும்
சொறி சிரங்கு காய்ந்து கருகட்டும்
தோல் நலம் விருத்தியடையட்டும்
இருண்ட மனங்களெல்லாம்
வெளிக்கட்டும்
ஆறு மாத்திற்காவது
சீராக அதைத் தீர்த்திடு

-ஜெயவதி எட்மன்.

## வல்லமை தாராயோ?

சிட்டுக் குருவியொன்று
பட்டுச் சிறகடித்துப் பறக்கிறது
என் சிந்தைக்குள்ளே.
அதை
அரவணைத்து வளர்த்திடாமல்
மனம் அலைபாயுது
ஆட்டு மந்தையைப் போலே

அகதி வாழ்க்கை தொடங்கி இன்று
ஆண்டுகள் பலவாச்சுதையா- என்
அன்னை தந்த அழுகுருவம்
உருக்குலைந்து போச்சுதையா
உண்டு களித்து உடுத்துத் திரிய
இங்கே ஒரு குறையுமில்லை
உள்ளத்துக்கு அமைதிமட்டும்
அருகிலில்லை

வந்த இடத்து வசதி வாழ்க்கை சில
வசந்தங்களைத் தந்தாலும்
வாழ்வியலின் போக்கில் நிறை
வருத்தங்களே மிச்சம்
வல்லமை தாராயோ இறைவா தமிழ் ,
மாநிலம் பயனுற வாழ்வதற்கே

சொந்தமில்லா தேசமதில்
சொத்துச் சேர்க்கும் ஆசையினால்
சுகங்களையும் தொலைத்துவிட்டு
சொந்தங்களையும் மறந்துவிட்டு
பறந்து பறந்து திரிகின்றேன் நான்
பணம் பண்ணும் மாயையிலே.
இருந்தும் என்ன கண்டுவிட்டேன்

உடலும் இளைத்துச் போச்சு
உதிரமும் வற்றிப்போச்சு
கடல்போல் காணும் இன்பம்
கற்பூரமாய்க் கரைந்து போச்சு

பொன்னெழுத்தில் பொறித்து வைக்கும்
பொது எண்ணம் கொண்டேனில்லை
என்னைச் சுமந்த
அன்னை மண்ணின் அவலம் கண்டும்
மனம் நொந்தேனில்லை

எனது வாழ்க்கை
இனித்திட்டால் போதும்
எனக்கேன் பிறர்தொல்லை என்றே
எண்ணி இருந்துவிட்டேன்
இது நல் வாழ்க்கையில்லை

கார்மேகம் நீங்கி
கண்விழிக்கும் கதிரவன்போல்
கடைசியில்தான் என்மனத்திலோர்
வெளிச்சம்.

கண்ணைவிற்று ஓவியம் வாங்கும்
கதையாய் வாழ்வைத் தொலைத்து
வாங்கும் பொருள் வந்தும்
பின்னே ஏது பயன்?

ஏங்குகிறேன் ஏங்குகிறேன் இறைவா
வல்லமை தாராயோ இந்த மாநிலம்
பயனுற வாழ்வதற்கே!

**-கொற்றையூர் வாசன்.**

# அரங்கினிலே...

## தமிழீழப் பெண்கள் அமைப்பினரின் மகளிர்தின விழா!

மார்ச் 8 மகளிர் தினம்.

புலத்தில் தமிழீழப் பெண்கள் அமைப்பினரால் ஜேர்மனியில் 5 நகரங்களில் இந்நாள் கொண்டாடப்பட்டது. முதன்நகரவிழாவாக வூப்பெற்றால் நகர் விழாக்கண்டதுசுடரேற்றல்,அகவணக்கத்துடன் ஆரம்பமான இவ்விழாவினை முற்றிலும் பெண்களே முன்னெடுத்தது சிறப்பாய் அமைந்தது.

சிறப்புரையாற்றவென வருகைதந்திருந்த இமானுவேல் அடிகளார் அவர்கள், இந்த விழாவினைப் பாக்கும்போது ஆண்களுக்கென்றொரு தினம் இல்லாதுபோய்விட்டதே என்றார். உண்மைக்காக நீதிக்காக சாதி மத வேறுபாடுகளற்ற ஓர் விடியலை நோக்கிய போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் பெண்களின் பங்கும் அளவிடற்கரியது என்பதையும் அவர் தமதுரையில் குறிப்பிட்டுக்காட்டினார்.


சிறப்புரையாற்றிய ஆசிரியை திருமதி ஆயிலியம் நாகலிங்கம், மகளிர் தினத்தின் தோற்றம், ஒடுக்கப்பட்ட பெண்களின் எழுச்சி இன்றைய பெண்களின் உரிமையோடடங்கிய கடமைகள்பற்றி உரையாற்றினார்.

தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்களாகட்டும் என்ற தலைப்பில் திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள் தலைமையில் ஆசிரியைகள் துஷ்யந்தி ஜெகதீஸ்வரன், குணரஞ்சனி மோகன், உமா கதிர்காமநாதன், கலா ஜெயரட்ணம் ஆகியோர் பங்குகொண்டு கவிதாநிகழ்வை உணர்வு பூர்வமாக களையூட்டச் செய்தனர்.

முற்றிலும் பெண்களே பங்குகொண்ட நாடகம் ஒன்று அரங்கேறி அனைவரையும் ஆச்சரியப்படுத்தியதோடு மிகப் பாராட்டையும் பெற்றது. ஆண்களின் பாத்திரங்களையும் பெண்களே ஏற்று நடித்திருந்தார்கள். இன்னிசை விருந்திலும் பெண்பாடகிகளாகவே இன்னிசை விருந்தாளிகளாகி எழுச்சிப் பாடல்களைத் தந்தனர். கலை பண்பாட்டு நடன ஆசிரியர்களால் நடன நிகழ்வுகள் அற்புதமாக பெண் எழுச்சிபற்றிய கருவோடு கூடியதாக நடன விருந்தளித்தனர். அன்றைய தினம் ஜேர்மானிய மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் மிகவும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்த காட்சியும் செயல்பொறுப்பும் பாராட்டப்பட வேண்டியது. பெண்களின் முழுமுயற்சியில் முன்னெடுக்கப்பட்ட மகளிர்தின விழா பெண்களிடையே பெரும்விழிப்புணர்வை கட்டியங்கூறி நின்றது. வரவேற்புரையோடு ஆரம்பித்த நிகழ்வு நன்றியுரையோடு நிறைவுபெற்றது.

-ஸரண்யன்

## உடைந்திடும் தாஜ்மகால்கள்.



மூன்றாம் பிறை நுதலாளின்
மோகனப் புன்னகை சிதற
முன்னெழுந்த மலைகளிலே
மோதியே நொருங்கிடுவார்
தீண்டாத பேரழகு
திரையிட்டும் மறையாத வோரழகு
திகட்டாத நறுந்தேனோ
செவ்விதழும் கனிச்சாறு
இருளை கூந்தலுக்குள் குழைத்து
இதழுடன் நெய்தவள்
இரவெல்லாம் தூங்காதவாறு
இளைஞர்களை தைத்தவள்
பெருமைமிகு நாற்குணங்களை
ஆடையாக அணிந்தவள்
பெண்ணவளைப் படைத்தவனுக்கு
பெருமைதனைச் சேர்த்தவள்

வீணையினடிப் பாகமதாய்
பின்னழகின் திரண்ட தோற்றம்
விரல்களெல்லாம் தீண்டிவிட்டால்
விழியிரண்டிலும் மாற்றம்
தானைகளிடம் தோற்றுவிடாத
தளபதிகள்கூட
தாவணியின் கதகதப்பில்
தமைமறந்து போய்விடுவார்.

வாழையினடிப் பாகமதாய்
கால்களதனைக் கொண்டிருந்தாள்
வற்றாத நதியாக
வரம்புகளுக்குள்ளேயே ஓடினாள்
தாழைமடல் போன்ற
தளிர்ப்பாதங்களை யுடையாள்
தரணியிலே உலாவரும்
தண்ணிலவு போலாவாள்
நீள்விழியில் நீந்தியே
நெஞ்சமதிலிடம் பிடித்துவிட
நெடுநாளாயிளைஞர் முயன்று
நெடுமூச் செறிந்தாலும்
ஆழ்கடலி னாழமதை
யறிந்தவர்க ளெவருமில்லையே
ஆயினு மொருவன்
அப்பந்தயத்திலே ஜெயித்துவிட்டான்.

-இ. சம்பந்தன்

மாலை மயங்கிட
மஞ்சளைக் குழைத்தது வானம்
மல்லிகையொன்று சாய்ந்தது
மன்னவனின் மார்பினிலே
ஆழி பொங்கியெழுந்து
அலைக் கரங்களை நீட்ட
அலைபாயும் நெஞ்சினராய்
அவர்களிருவருமே வாட

கற்றைக் குழலுக்குள் அவன்
கைவிரல்கள் ஊடுருவ
கன்னியவள் மெழுகாகியவன்
கைகளுக்குள் கனிந்தாள்
புற்றிப்படர்கின்ற கொடிபோலானாள்
பருவத்தின் படையெடுப்பை
முறியடிக்க முடியாமல் தோற்றாள்
மணிக்கழுத்தில் மணிகளெதுவுமில்லா
மலர் வதனத்தாள்
மணிகளென அவனைமட்டும்
பூட்டிக் கொண்டாள்
வணிகர்குல பரம்பரையில்
வந்துதித்த காதலனோ
வஞ்சியின் மலர்க்கரம் பற்றும்வரை
வரம்பு மீறவில்லை.

சிற்றிடையில் குமிழியிடும்
பரப்பெல்லாம் போர்த்தி
சின்னவளும் காத்திருந்தாள்
திருநாளை நோக்கி
பெற்றவரின் சம்மதத்தை
பெறச் சென்றானொரு நாள்
பேதலித்தான் மனஞ் சோர்ந்தான்
பித்தனாகி விட்டான்
தீண்டத்தகாத குலப்பெண்ணை
தீண்டலாகுமோ?
தீயெழும் வார்த்தைகளால்
தம்மகனைத் தீண்டினார்
வேண்டுவதைத் தருவதற்கு
விளச்சலில்லாதவர் -ஏழை
வீட்டுப்பெண்ணை ஏற்றுவிட்டால்
இகழ்ச்சி வருமென்றார்.

ஏழைகளின் இல்லங்களை நோக்கி
எழில்நிலவு இறங்கிவந்து
இருள்கறையை துடைத்திருந்தாலும்
ஆலைகளின் அதிபதிகளோ
அனுமதிப்ப தில்லையதை
அவலமுறும் குலத்தில் சென்று
கைநனைப்ப தில்லை

மாலைவருமென்றே நாளும்
காத்திருந்த கன்னியவள்
மனமொடிந்து போனதனால்
மரணப் படுக்கையானாள்
வேளைவருமென்றே நாளும்
விழித்திருந்த கங்கையவள்
வேதனைதனையே தாலியாக
நிதம் சூட்டிக்கொண்டாள்

இறக்கை கட்டிக்கொண்டே
விரைந்து சென்றது காலம்
இருவருள்ளமும் இருகரைகளையு
மிணைக்கின்ற பாலம்
பறக்க நினைத்த
பறவைகளின் சிறகை
துண்டித்தது விதியா
பார்தனில் அவ்வப்போது
படர்ந்திடும் சமூகச் சதியா

ஒப்புதல் அளிக்காத
ஈரமில்லா நெஞ்சங்கொண்டவரே
ஒடிந்துபோவதெல்லாம்
பிள்ளைகள் கட்டிய
தாஜ் மகால்களே
தப்புகளெங்கேயென்று
கொஞ்சம் தேடிப்பாருங்கள்
தரணியிலே காதலர் வாழ
தகுதிகளை யுதறிவிடுங்கள்

☐.

## காதல் மலர்கள் இங்கே உதிர்கின்றன. கார்காலமோ என மனங்கள் உறைகின்றன.



"காதல் பருவகால உணர்வின் ஓர் வெளிப்பாடா, அல்லது உயிரின் உன்னதமான தேடலா?" என்னும் ஆராய்ச்சியில் மனோதத்துவ நிபுணர்கள், கவிஞர்கள், தத்துவஞானிகள், தத்தம் பாணிகளில் கருத்துக்களை உருத்தோடு விரிவாக்கிப் பரிமாறிநிற்கையில், கட்டுப்பாடற்ற காதல் ஓர் சில மாதங்களிற் கசந்து, காதலர் அந்நியர்போற் பிரிந்துபோகும் ஐரோப்பியக் காதலின் அவலத்தை அலசவே என் சிந்தனையைத் தமிழ்கொண்டு அரவணைத்தேன்.

பாலியற் பக்குவநிலை (Sexual maturity) அடைந்த காலத்திலிருந்து ஆண்கள் ஆண்மைவலு அற்ற நிலையையும்(Impotence), பெண்கள் பாலியல் அதிசீதள நிலையையும் (Freigidity) அடையும்வரை, ஐரோப்பியர் தம் வாழ்வில் குறைந்த பட்சம் ஆறுமுறைகளேனும் வேறுவேறு மனிதர்கள்பால் காதல்வசப்பட்டு உடலின்பம் அனுபவிக்கும் அலங்கோலத்தைச் சகிக்கும் கலாச்சாரமும், அதையே அற்புதமென அங்கலாய்க்கும் கவிஞர்களின் கலாச்சாரமும், தம் ஒவ்வொரு குழந்தைகளும் வெவ்வேறு ஆடவனின் **முத்துக்கள்** என அஞ்சாது அகம்பாவிக்கும் நாகரீக நளினங்களின் விபச்சாரமும், தந்தையோ அல்லது தாயோ அற்ற குழந்தைச் செல்வங்களின் ஆரோக்கியமற்ற மனநிலையின் மறைமுகமான சோகப்பிரச்சாரமும், பல பிரிவுகள் விட்டுச்சென்ற ஆழ்ந்த சோகநினைவுகளின் கீறல்களால் அல்லலுறும் மனங்களில் அமைதியைக் காண்பிக்கமுயலும் மனோதத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவுகளும், அறிவுரைகளும், இக்கட்டுரையிற் கருவாகி காதற் சோலைக்குள் பூத்துக் குலுங்குமுன், அக் காதற் தோட்டமே உறைந்து போக ஏதுவாகும் காரணங்களில் இக்கட்டுரை விரிவாகி நிற்பதை காமக்கலப்படமும் உண்மைக்குப் புறம்பான சலனமும் அற்றுக் காண்போம்.

-மகேந்தி.

ஒன்றை ஒன்று தங்கி வாழவேண்டிய இயற்கைவிதியின் சூழ்நிலையால் தம் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளப் பிறரைத் துணைக்கு இணைப்பதும், தேவைகள் நிலைமாறிய அல்லது அற்றுப்போன நிலையில் தற்போதைய அணைப்பை சற்றுத் தளரவிட்டு, புதிய பிணைப்பிற்காக மற்றுமொருவரை தம் புதிய தேவைகளின் நிலைக்கேற்ப ஏற்றுக்கொள்வதுமே உயிரினங்களின் அற்ப குணாதிசயமாகி,அது மனித குலத்தையும் விதிவிலக்கின்றி ஆக்கிரமித்து நிற்கின்ற தன்னலத் தன்மையை மறுத்துக் கூற சற்றுத்தயங்கியே வியாபிக்கின்றன உளவியல் ஆராய்ச்சியின் வியாக்கியானங்கள்.

அந்த ஆராய்ச்சியின் பிரகாரம் கருவறையில் வளர்ச்சிபெறவேண்டிய கட்டாயம் அற்றுப்போன நிலையில் கருவறையிலிருந்தே வெளியேறும் சிசு, தாயின் அரவணப்பிலும் அன்பிலும் தன்னையே தந்து நிற்பதுபோற் பாசாங்கு செய்கிறதோ என எண்ணவே தோன்றுகிறது. இருந்தும் தமக்காக வாழாது பிறருக்காக வாழும் தாய்மையும் இக்கருத்திற்கு விதிவிலக்காக அமைவது திண்ணமே என்கிறது என் சிற்றறிவு.

அந்தவகையிலே தன் தேவைகளைத் தாயின் அரவணைப்பிலும் தந்தையின் அன்பிலும் பூர்த்திசெய்துகொண்ட குழந்தை, நீலநயன அதிசயத்தை அவர்கள் மூலம் அனுபவிக்க முடியாத இக்கட்டான பரிணாமவளர்ச்சி நிலை (evolution)யில் தம் தேவைகளைப் பூர்த்திசெய்யும் தந்திரமான இயல்பின் வசத்தால், ஓர் அந்நியனைக் காதலெனும் மாயவலைக்கு, காதல் தெய்வீகம் எனும் இழையங்கள்கூட்டி, அன்புமொழி காட்டி, பலவருடங்கள் தம்மைக் காத்துநின்றவர்களையே காதலுக்காகத் தூக்கியெறிந் தோடவும் துணிந்து விடுகிறது. இந்நிலையில், 'காதலின் வேகம் காமமேகம் கலையும் வரையே' எனும் கவிவரிகளையும், கருமேகம் மழையையும் காமமேகம் காதற் கலையையும் தருமென்ற கவிநெறியையும் நினவுகூரின் காதல் காமகீதம் எனும் ராகத்தையே ரீங்காரமிடும்.

இருந்தும், கம்பரோ தன் கவித்திறனால் 'அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்- காதல் அரும்பியது' என்று ஆரம்பித்து காதலிற்குத் தெய்வீக முலாம் பூசி காமத்தை அங்கே சங்காரம் செய்ய முயல்கின்றார்.

கவிக்கோ பாரதியாரோ,

'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பார்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணத்தோரத்தே
ஊரினுள்ளே காதலென்றால் உறுமுகிறாரே..' ஏன்று நம்நாட்டின் அன்றைய நிஜவாழ்வுக் காதலைக் கண்டித்துக் கவலையோடுகூடிய பெருமிதக் கவிதையில் காதற்காரம் காண விளைகிறார்.

புரட்சிக்கவி பாரதியின் புருவங்களையே குவியச்செய்த நம் கலாச்சாரமானது ஏன் காவியத்திலும் நாடகத்திலும் தாம்பத்தியவியலில் இருமையிலே இரவிலும் காதலைச் சுவைக்கத் துணைபோனது என்ற சுவையான விளக்கத்தை ஐரோப்பிய Valentineதினமாகிய காதலர்தினத்திலிருந்து மனோதத்துவ வைத்தியசாலைவரை சென்று ஒரு சிலைக்குரிய கம்பீரத்தோடு நம் சிறார் வாழவேண்டுமென்ற ஒரே நோக்கோடு அலசுவோம்:

Valentineதினமென அழைக்கப்படும் காதலர்தினம் பற்றி பல உருவகக் கதைகள் உண்டு. அதாவது இந்நாளிலேயே (Feb.14) காட்டிலுள்ள பறவைகள் குளிர்கால- கார்கால இடைவேளைக்குப் பின் மீண்டும் புணர ஆரம்பிக்கின்றன. என்ற நம்பிக்கையில் ஆங்கிலேயர் கி.பி. 300 ஆண்டுகளில் (Feb.14) காதலர் தினமாகக் கண்டனர் என்றும், பழைய ரோமாபுரியில் இத்தினமானது 'கருத்தரிக்கும் ஆசி நல்கும் இறையை' வணங்கும் தினமாக ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டு நாளடைவில் காதலர் தினமாக்கப்பட்டுவிட்டது என்றும் காதலைப் புனிதமாகக் கருதிய கொள்கைவீரர் Martyr ஒருவர் கொண்ட காதலுக்காக சிறைப்பட்டு உயிர்துறந்த தினத்தின் ஞாபகமாக இது அமையப் பெற்றுள்ளது என்றும் பற்பல கதைகள் உண்டு.

இத்தினத்தைக் காதலர்கள் மறப்பினும், மலர்களை விற்பனைசெய்யும் ஸ்தாபனங்கள் சிரத்தையுடன் விளம்பரப்படுத்தி தம் வியாபாரத்தை ஊக்குவிக்கும் பணியில் வெற்றியும் கண்டுள்ளார்கள் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை என்றும், காதலர் சிலருக்கு இது ஏதோ ஒருவகையிற் கொண்டாட்ட தினமாக இருந்தபோதிலும் காதலர்களின் பிரிவற்ற பிணைப்பையோ அல்லது காதல் உயிர் உள்ளவரை வாழ ஏதேனும் ஓர் தீர்வையோ சாதித்துவிடவுமில்லை: சாதிக்க முயலவுமில்லை என எள்ளிநகையாட முனைகிறது பல புள்ளிவிபரங்கள், அறிவிலிகளின் கண்களுக்கு சற்றுத் தள்ளி நின்றே!

'காதலர்கள் தினத்தன்று தரப்பட்ட மலர்கள் வாடுமுன் காதலர்கள் பிரிந்தோடுகின்றனர்' என்கிறது ஓர் ஐரோப்பியக் கவிதை வரி.
'பிரிந்த காதலாற் சரிந்த மனதை சரிசெய்ய, விரிந்தமனத்தோடு இன்னொரு காதலை நாடு' என்ற அதே கவிதையின் அடுத்தவரி காதலுக்காகத் தன்னையே அழித்துக்கொண்டதாகக் கருதப்படும் அந்தக் கொள்கைவீரரின் சவக்குழிக்குள் தன்னை நெரிக்க முயல்கிறது.

இனி கவியரங்கிலிருந்து விடைபெற்று, உளவியலாளரின் மருத்துவ மனைக்குச் செல்வோமாயின் காதல் ஏக்கத்தால், தோல்வி தந்த துக்கத்தால், பல வேள்விகளைக் காதலிற்கண்ட களிப்பால், சலிப்பால், தற்சமயம் தம்மோடு இணைந்திருக்கும் தாம்பத்தியப் பங்காளிக்குத் தாம் ஏற்கனவே செய்த தவறுகளால் ஏற்பட்ட குற்ற உணர்வால், கடந்த 'கால காதற்பங்காளியை மீண்டும் காணநேர்ந்த களிப்பால், மீண்டும் அவர்களோடு புதுப்பிக்கப்படும் உறவின் வலிப்பால் ஏற்படுகின்ற உணர்வுகளின் அலங்கோலத்தால் தாக்கப்படும் உணர்ச்சிநரம்புகளின் சிதைவால், இன்றைய தாம்பத்தியக் குலைவால் குழம்பிநிற்கும் மனநோயாளிகள் பற்றி, உளவியலாளர் தரும் உளம் உருகும் உண்மைக் கருத்துக்களையும் நோயாளிகளை வருத்தும் அந்த சீதள நிலையை குணப்படுத்த அவர்கள் முயலும் வகைகளையும் தரும் இயல்பான விளக்கங்களையும் கண்ணோட்டமிடலாம்.

காதல் காதல்வசப்பட்டோரைக் குருடாக்கும் தன்மை வாய்ந்தது (Love makes blind- Liebe macht blind ) என்பது சமுதாயக்கருத்தாகமட்டுமிருந்த காலம் கடந்து விஞ்ஞானக் கருத்தாக சஞ்சிகைகளை விளக்கத்தோடும் உருத்தோடும் ஊடுருவி வருகின்றது.

காதல் உணர்வானது சம்பந்தப்பட்டோரை சரியான திசையில் கோணத்தில் சிந்திக்கவிடாது ஓர் மந்தமான, முட்டாள்தனமான சூழ்நிலைக்குக் காதலரைத் தள்ளுவதற்கு, ஞாபகசக்தியையும் மன ஒருமைப்பாட்டு சக்தியையும் (Concentration of mind) அளிக்கும் மூளையின் பகுதிக்கு, அதிக கூடிய குருதி காதல் உணர்வால் அருவிபோற் பாய்ந்து அந்தப் பகுதிகளின் கலங்களைத் தற்காலிகமாகச் செயல் அல்லது செயற்திறன்வலு குறையச் செய்துவிடுவதே காரணமாகிவிடுகிறதாம் என்று Andreas Bartels என்ற சுவிஸ்நாட்டு உளவியல் விஞ்ஞானி கருத்துத் தெரிவித்துள்ளார். அளவுக்கு மிஞ்சின் அமிர்தமே விஷமாக மாறின், நம் குருதியே நமக்கு விரோதியாவதில் வியப்பென்ன?

இந்நிலையிலே காதல் வசப்பட்டவர்கள் தமது காதற் பங்காளியின் திறமை, அழகு, அறிவு போன்றவற்றை உண்மையாகக் காணப்படும் அளவு நிலைமைகளைவிட பல மடங்கு அதிகமாகவே கணக்கிட்டுக் கொள்கிறார்களாம். இனாமாகத் தரப்படும் பணத்தை (Tip) அதிக அளவில் கொடுப்பதும், பிழையான முடிவுகளை எடுப்பதும், பின் தவிப்பதும் போன்ற பல கோளாறுகளின் பிடியிற் சிக்கிவிடுகிறார்களாம், புதிதாகக் காதல்வசப்பட்டோர் காதல் தந்த மந்தமான அந்த மனநிலை காரணமாக!

இவற்றில் எதையுமே கருத்திற்கொள்ளாது சினிமாக் கவிஞர் காதலை நம் இளநெஞ்சங்களில் விருந்தாகப் படைப்பது சமூகத்தை சீர்குலைக்கும அறியாமையே!. காதல் மோகத்தின் வேகம் தணிந்ததும் தம் கணிப்ப தவறானது என்று உணர்ந்து தனித்துப்பிரியவும் ஒருவரை ஒருவர் கண்டும் காணாததுபோல் ஏகாந்தமாகத் திரியவும் செய்கின்றனராம்.

'காதல் வசப்பட்ட ஆரம்பகாலங்களில் இரு உள்ளங்களின் சிந்தனைகள், அவர்களின் உணர்வுகள், செயல்கள் போன்றவை ஏற்கனவே கூறப்பட்ட அந்த மந்த உணர்வால் ஒரேமாதிரி இருப்பது போலிருந்த போதிலும், மோகதாகம் தணிந்த நிலையில் தம்மைத்தாமே இனங்கண்டுகொண்டபின் வேறுபட்ட தேவைகள், மாறுபட்ட சிந்தனைகள், வித்தியாசமான வாழ்க்கைத் திட்டங்கள், மிகவும் அருகிப்போன ஊடல் நிறைந்த கூட்டாக இயங்கும் தன்மை அருகித் தனித்தியங்கும் தன்மைப் பெருக்கம் போன்ற மனநிலை மாற்றங்கட்கு காதலர் ஆளாகிநிற்கையில், மீண்டும் தமக்கு இசைந்த இன்னொருவரைத் தேடிக்கொள்ளலாம் எனும் கலாச்சாரப் பாதை வழிவகுக்க, ஏற்கனவே ஏற்பட்ட காதல் கதையாகி, புதிய காதல் ஒன்று விதைக்கப்பட்டு, மீண்டும் சதை இன்பம் காதலைத் தெய்வீகமாக்க முனைந்துவிடுகிறது!' என்கிறார் Hassebranck என்னும் மற்றொரு அறிவாளி.

இப்படியே தொடர்ந்து மாறிமாறி காதல் வசப்பட்டு, அந்த ரம்மிய உணர்வில் ஒருவர் பலகாலம் சஞ்சரிக்கநேரின் காதல் உணர்வால் மூளையில் ஏற்படும் மந்தநிலை நிரந்தரமாகி அவர் ஓர் மனநோயாளியாகிவிடவோ அல்லது மூளையின் செயலாற்றந் தன்மை குறைந்தவராக இயங்கவோ வேண்டி வந்துவிடுகிறது.

'காதல் தரும் மந்தநிலையால் மூளையில் ஏற்படும் 'பாதிப்பு, போதை வஸ்துக்கள், மதுபானங்கள், புகைப்பழக்கம் போன்றவை மூளையைப் பாதிக்கும் அதே கணிசமான அளவிலேயே நிகழ்வு பெறுகிறதாம்' என்று மிக வேதனையோடு காதலைச் சாடுகிறார் மனோதத்துவ நிபுணரான Hassebranck, 'ஏன் காதல் நம்மைக் குருடாக்கி இருட்டறையிற் தள்ளுகிறது?!' என்ற தன் ஆய்வுக்கட்டுரையில்.

அத்தோடு ஆண்பெண் இருபாலாரும் பருவநிலையை அடையும்போது (Puberty) உடலின் உணர்வுகள் மூளைக்கும்,மூளையின் தகவல்களை உடல் உறுப்புக்களுக்கும் எடுத்துச்செல்லும் மெல்லிய நூல்போன்ற திசுக்களால் அமைக்கப்பட்ட நரம்புகளுக்கும் மூளைக்கும் இடையே உள்ள தொடர் அமைப்பில் மாற்றம் நிகழ்வதால் இவர்கள் உணர்ச்சிகளை இவர்களால் புரிந்துகொள்ள முடியாமல் விழிக்கும் சமயத்தில் வெளிப்படும் காதல் சிலகாலங்களில் நிலையாது கலையும் என்கிறது அந்த விஞ்ஞானத் தகவல்.

இளைஞர்களின் உணர்ச்சிக் கோளாறிற்கு மேற்கூறிய காரணங்களை விட கோமோன் மாற்றங்களும் துணைக்காரணங்களாகி விடுகின்றது. இப்படியான காரணங்களின் தாக்கமே, இளைஞர்கள், யுவதிகளை பருவமடையும் காலங்களில், பெரியோரை மதியாமை, சமூக ஏற்பாட்டிற்கெதிரான நடவடிக்கை, பண்புமிக்க வழிகளிலிருந்து விலத்திக்கொள்ளல் போன்ற மனங்கொள்ளா செயல்களிற்கு உந்துகிறது. 20, 21 வயதுவரை இந்நிலை தொடரலாம் என்றும் இக்காலத்தில் பெற்றோர் உறவினர் சமூகம் கல்விகற்பிக்கும் ஆசான் போன்றோரின் அன்பு, அறிவுரை, கண்காணிப்பு, ஆதரவு போன்றவை கணிசமான அளவில் துணைபோகும் அவர்களை நல்வழிப்படுத்த! என்கிறார் அந்த மாமனிதர் தன் ஆராயச்சி தந்த அறிவால்.

இதனாலன்றோ நம்மவர் திருமணத்திற்கு முந்திய இளம்பருவக் காதலைக் கண்டித்தனர்.தம் மக்கள் நலம்கருதி வழமைக்கு ஒவ்வாத அக்காதலைத் துண்டித்தனர். திருமணத்தின் பின் மலரும் காதலைத் தெய்வீகம் எனவும் வர்ணித்தனர்.

□

சூரியன் உலகத்தைச் சுற்றிச் சுற்றிவருகிறது
காலையில் கிழக்கிலும் மாலையில் மேற்கிலும்.
அது பூமியைச் சுற்றுவதால்தான் பகலும் இரவும் வந்துபோகிறது.
விடிகிறபோது சூரியன் வரும். அது பூமியின்மேலாக ஓடிப்போய் நிலத்தைச் சூடேற்றிவிட்டு மாலைப்பொழுதில் கடலுக்குள் போய் விழுந்து மறைந்துவிடும்.
பூமி இருட்டாகும். இருட்டுக்குள் மனிதர்கள் ஆடுகிற ஆட்டங்கள் எல்லாம் ஆடிமுடித்து கண்ணயர்ந்து தூங்குகிறபோது...மறுபடி சூரியன் கிழக்கில் உதிக்கும்.
சின்னவயதில் இப்படித்தான் எண்ணிக்கொள்ள முடிந்திருக்கிறது.
பூமியைச் சுற்றும் சூரியன்.
ஆனால் வளர்ந்து கொஞ்சம் அறிவு தெரிகிறபோது புரிந்தது-
சூரியன் பூமியைச் சுற்றுவதில்லை பூமிதான் தானும் தன்னைச் சுற்றிக்கொண்டு அப்படியே சூரியனையும் சுற்றிக்கொண்டு வருகிறது என்ற உண்மை.
புரியாத வயதில் பிரமிப்பூட்டுகிற பொய்கள் புரிகின்ற வயதில் தெளிவூட்டுகிற உண்மைகளைவிட இரசனைக்குரியதாக இருந்து விடுகின்றன....

□

எவர்மீதும் அல்லது எதன்மீதும் அதிகம் பற்றுவைத்துக்கொள்ளக் கூடாது என்பதில் இப்போதெல்லாம் அவன்மிகவும் அவதானமாயிருக்கிறான்.

மனிதர்களுக்கிடையே ஏற்படும் சகல உறவுகளும், கொடுத்து வாங்கும் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு வலுப்பெறுவதால், காதல் வாழ்வு பாலைவனமாக மாறிவிடாதிருக்க, காதலர்கள் அன்பு, நியாயம், மதிப்பு போன்ற சமூக அந்தஸ்துக்களையும், மனிதநேயங்களைப் போற்றும் சக்திகளையும், ஒருவர்க்கொருவர் மாறிமாறிப் பரிமாறியே வாழப் பழகவேண்டுமெனவும் இது இன்றைய தலைமுறையினரிடம் அருகிவிட்டமையும், காதலர்கள் அனுபவிக்கத் தவிக்கும் நீல நயன இன்பம் இலகுவில் எய்தப்பெறுவதும், முற்கூறிய பல மற்றைய விஞ்ஞான விளக்கங்களை வலுப்பெறச் செய்து, காதலை சாதல்வரை தொடரவிடாது பாதியிலே காதல் உணர்வு உறைந்துபோகக் காரணமாகிவிடுகிறதாம் என்கிறார் அந்த ஞானி.

ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கும் அன்பு, எதிலும் இருவரும் கலந்து கொள்ளும் பண்பு,புதிய புதிய பொது குடும்பவிடயங்களில் ஈடுபடும் தெம்பு,தம் குழந்தைகளுக்காக வாழும் உளங்கவர் பொறுப்பு, கட்டுப்பாட்டோடு காமத்தைச் சுவைக்கும் மனச் சிறப்பு இவை போன்றவையே ஓர் ஆணையும் பெண்ணையும் தாம்பத்தியத்தில் இறுக்கமாக இணைக்கும் என்கிறார். அவர் கூறும் வேறு பல கருத்துக்களை சுருக்கமாகத் தொகுக்குமிடத்து-

காதல் உடல் உணர்வுகளின் தேடல், உணர்ச்சி நரம்புகளின் உன்னதமான பாடல். உள்ளங்களின் உணர்தலில் உள்ளெழுந்த காதல் உயிரோடு உலவும், ஊடல்களின் தேடலில் மலரும் காதல் உடல் உறவிற்காக அலையும். சில இரவோடு கலையும். இது மகேந்தி காதலுக்குத் தந்த விலையல்ல காதலின்பத்தை அனுபவித்த ஓர் இனத்தின் அனுதாப நிலை. திருமணத்தின்பின் நிலவும் காதல் தெய்வீகமாக நம்மோடு வரும் உலா. இக்காதலருக்குத் தினமுமே காதலர் தின விழா. இவர்களுக்காக மட்டும் வருமே வானிலும் நிலா. □

கூடிக் களிப்பதில் ஏற்படும் மகிழ்விலும்மேலாய் கூடிப்பிரியும் அந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்வதென்பது இப்போதெல்லாம் அவனுக்கு இயலாத ஒன்றாகப் போய்விட்டது.
அதனால்தான் இந்த எச்சரிக்கை உணர்வு.
ஆனால் அதையும் மீறிக்கொண்டு அவனுள்ளே குடியேறிவிட அவளால் முடிந்திருக்கிறது.
இந்தச் சந்திப்பு நிகழாமலே இருந்திருக்கக்கூடாதா என்று அடிக்கடி அவன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறான்.
பற்றறுத்த ஒரு மனோநிலையில் தன்வாழ்வைத் தொடரத்துடிக்கும் அவனால் அவளுடைய நினைவுகளைச் சுமந்துகொண்டிருப்பதென்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது.

**இந்துமகேஷ்**
எழுதும்

# தூரத் தூர...

**3** அத்தியாயங்களில் நிறைவுறும் இந்தத் தொடர்நவீனத்தின் முதலாவது அத்தியாயம் **அடுத்த இதழில்....**

சும்மா நாங்களும்
இலக்கியம் கதைக்கிறம்

இலக்கியவாதிகள்
சண்டைக்கு வரவேண்டாம்!

# திரைப்படங்களில் இலக்கியம்?!

*மனிதன் வாழும்உலகம் ஒன்று.*
*அவன் வாழ நினைக்கும்உலகம் ஒன்று.*

*எது எது நடக்கவேண்டும் என்று அவன் ஆசைப்படுகிறானோ அது நடந்தாகவேண்டும் இந்த உலகில். ஆனால் அவன் எதிர்பார்த்ததுபோல் யதார்த்த உலகில் எது நடக்காவிட்டாலும் அவனது கனவுலகில் அல்லது கற்பனை உலகில் அவன் அதை அனுபவித்துத் தீர்க்கிறான். இதற்கு ஒரு வடிகாலாக அமைந்தது கலை. இந்தக் கலைகளின் பிரதிபலிப்பாக வெளிப்படுபவைகளே கலையுலக ஊடகங்கள். இவற்றில் தன்னுடைய மனவிருப்பங்களை வெளிப்படுத்தும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

*திரையுலகம் என்று ஒன்று உருவான பின்னால் மனிதன் தன்னுடைய மன உணர்வுகளை அதனூடாக வெளிப்படுத்தத் தொடங்கினான். வாழ்வின் நிஜங்களை விடவும் மேலானதாக அவனது கற்பனைகள் விரிந்து படர்ந்தது.*
*வாழ்வை அழகானதாக்கவும் அர்த்தமுள்ளதாக்கவும் அவன் விரும்பினான்.*
*எண்ணக்கிடக்கைகளை எழுத்துக்களாக்கி முன்வைப்பதிலும்பார்க்க அவற்றைக் காட்சிகளாக்கி மற்றவர் பார்வைக்கு வைக்கும்போது அதில் பன்மடங்கு பயனைக் கண்டான்.*
*அதனால் கதைகள் காட்சிகளாயின. கதைகளும் கவிதைகளும் காட்சிகளாகவும் பாடல்களாகவும் மாற நாடகங்கள் திரைப்படங்களாயின. எழுத்துக்கள் காட்சி வடிவமாயின. கர்ணபரம்பரைக் கதைகளாக உலாவந்த காவியங்கள் முதற்கொண்டு, சராசரி மனிதனின் வாழ்க்கைக்கதைகள் ஈறாக ஏராளமான கதைகள் திரைப் படங்களாக காட்சிப்படுத்தப்பட்டன.*
*திரையரங்குகளைத் தேடிச்சென்று படங்களைப்பார்த்த நிலைமாறி, வீடுதேடித் திரைப்படங்கள் வருகின்ற அளவுக்கு காலம் மாறியிருக்கிறது. அதனால் திரைப்படங்களின் தேவையும் அதிகரித்திருக்கிறது. இலக்கியங்கள் வாசிக்கப்படுவதை விடவும் அதைத் திரைவடிவமாக்கிவிட்டால் இலகுவாக இரசிகர்களைச் சென்றடைந்து விடுகிறது.கதைகளில் முன்னர் படித்த அரிச்சந்திரனும், குறவஞ்சியும், ஸ்ரீவள்ளியும், மகாபாரதமும், ராமாயணமும் மட்டுமல்ல, வரலாறுகளாக மாறிவிட்ட மாமனிதர்களும், தெய்வ அவதாரங்கள் என்றுபோற்றப்படும் ஏசுநாதர், புத்தர் போன்றவர்களும்கூட திரைப் படங்கள் மூலம் நம்மிடையே உலாவந்துகொண்டிருக்கிறார்கள்.*

திரைப்படங்கள் நல்லனவற்றைச் செய்தன என்பதைவிட திரைப்படங்களால் தீமைகளே அதிகம் விளைந்திருக்கின்றன என்ற கூச்சல் ஒருபுறமாக ஒலித்துக்கொண்டிருந்தாலும் திரைப்படங்களின் வருகையும் தேவையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நிலையில் அதுபற்றிய விமர்சனங்கள் சமூகத்தின் பல்வேறுமட்டங்களிலும் இருந்து எழுவதும் பெருமளவில் நிகழ்கிறது. இத்தகைய விமர்சனங்களின் வரிசையில்தான் திரைப்படங்களில் இலக்கியத்தைத் தேடும் முயற்சியும் நடைபெற்றுவருகிறது.
திரைப்படங்களில் எதுவுமே இல்லை அது வெறும் பொழுதுபோக்குச்சாதனமே என்று முற்று முழுதாக ஒதுக்கிவிடாமல் அதன் இலக்கியத்தன்மை பற்றி நாம் விவாதித்துக் கொள்வது இன்றைய தேவைகளில் முக்கியமானதொன்றாகிறது.

"சிரிப்புப் பாதி அழுகை பாதி
சேர்ந்ததல்லவோ மனிதஜாதி
நெருப்புப் பாதி நீரும்பாதி
நிறைந்ததல்லவோ உலக நீதி"
-இது திரைப்படப் பாடலாசிரியர் கண்ணதாசனின் பாடல்வரிகள்.
இந்தப்பாடலின் மேலும் சில வரிகள் இப்படி வருகின்றன:
"உடைத்த கல்லில் ஒன்று தெய்வம்
ஒன்று கோயில் ஒன்று வாசல்
இடத்தைப் பொறுத்தே எதுவும் மாறும்
இறைவன் படைப்பில் எல்லாம் ஒன்று"

-திரைப்படங்களுக்கும் இது பொருந்தும்.
பார்ப்பவர் மனத்தைப் பொறுத்தும் திரைப்படங்களின் தன்மை மாற்றம் அடைகிறது. நல்லபடங்கள் என்று பெரும்பாலானவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட படங்கள் பெட்டிகளுக்குள்ளேயே சுருண்டுபோனதும், என்ன படம் இது? என்று கிண்டல் பண்ணப்பட்ட படங்கள் பல வசூலில் சாதனைபடைத்ததும் எதனால் என்று ஆராய்ந்தால், அப்போதைய இரசிகர்களின் மனோநிலையே அதற்குக் காரணமாக இருந்தது என்ற உண்மை தெரிய வரும்.

இன்று தொழில்நுட்பம் அதிகளவில் வளர்ந்திருக்கிறது.
இந்த வளர்ச்சிக்கேற்பக் காட்சிகளை அமைப்பதற்கு கதைகள் தேர்ந்தெடுக்கப்படும் போது கதைகளின் தன்மை சிலசமயங்களில் சிதைவுபட்டுப் போகிறது. கதைக்காகக் காட்சிகள் என்றில்லாமல் காட்சிகளுக்காகக் கதைகளை அமைத்தாக வேண்டிய கட்டாயத்தில் உருவாகும் திரைப்படங்களில் கதை எங்கே என்று தேடிப்பிடிக்க வேண்டிய கட்டாயத்துக்கு இரசிகர்கள் தள்ளப்படுகிறார்கள்.
திரைப்படங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதற்காக வருகின்ற இரசிகர்களைவிட அதைப் பொழுதுபோக்காகப் பார்க்க வருகிறவர்களே அதிகம் என்பதால் கதைகள் இல்லாத படங்களும் பெருமளவில் வெற்றிபெறுகின்றன.
அடிப்படையில் எல்லாப் படங்களுமே அது சராசரிக் கதையுள்ள ஒரு படமாக இருந்தாலும் சரி Superman, Batman போன்ற வீரதீர சாகசங்களைக் காட்டுகின்ற படங்களாக இருந்தாலும் சரி ஒரு உண்மையைமட்டும் போதிக்கின்றன.
'உண்மையே வெல்லும்' என்ற உண்மையே அது.

*கதையின் நாயகன் அல்லது நாயகி நல்லவரோ கெட்டவரோ முடிவில் உண்மையே வெல்லும் என்ற உண்மையைப் போதிப்பதில் அவரே முன்நிற்கிறார்.*
*ஆக இதற்காகத் தானும் திரைப்படங்களை நாம் வரவேற்கலாம்.*
*இனி அதற்குள் இலக்கியத்தைக் காண்போம்.*
*இன்று நமது சமகாலத் திரைப்படக் கலைஞர்களின் வரிசையில் திரு.கமலஹாசன் அவர்களுக்கு ஒரு தனியிடம் உண்டு.*
*எல்லாக் கலைஞர்களிலிருந்தும் இவரைமட்டுமே ஏன் நான் முன்னிலைப் படுத்துகிறேன் என்றால் திரைப்படங்களில் வெறும் நடிகனாகமட்டும் இருந்துவிடாமல் திரைப்படத்துறையோடு இலக்கியகாரனாகவும் இவர் இருப்பதால்தான்.*

*அவரது அண்மைக்காலப் பேட்டியொன்றிலிருந்து சில வார்த்தைகள்:*



ஆங்கிலத்தில் சரித்திரம் இலக்கியம் இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன.ஆனால் தமிழைப் பொறுத்தவரையில் சரித்திரமும் இலக்கியமும் ஒன்றாய்ப் பிணைந்துபோய்விட்டது. சொல்லப் போனால் ஆத்திகமும், சரித்திரமும், இலக்கியமும் ஒன்றுதான். கல்வெட்டுக்கள் இருக்கும் இடம் எங்கேஎன்றுபார்த்தால் அது கோயிலாகத்தான் இருக்கிறது. ஆகவே எல்லாமே ஒன்றாக இணைந்துவிட்டது.
சினிமாவுக்கு இலக்கியத்தின் மதிப்பு வருமா என்று கேட்கிறீர்கள்.என்னைப் பொறுத்தவரை சினிமாவே இலக்கியம்தான். சினிமா திரைக்கதை என்பது இலக்கியம்தான்.
அந்தக்காலத்தில் எத்தனை புலவர்கள் இருந்திருப்பார்கள். எல்லோருமே கம்பராமாயணம் எழுதினார்களா? ஆனால் எல்லோருமே இலக்கியம் படைக்கும் முயற்சியில்தான் இருந்திருக்கிறார்கள். முயற்சியில் இருப்பவன்தான் நானும்.
சினிமா கண்டிப்பாக ஒரு இலக்கியம்தான். இதை எந்த இலக்கியவாதியின் கண்களை நோக்கியும் என்னால் சொல்லமுடியும். பெரிய எழுத்தாளர்கள் என்று நீங்கள் ஒரு பத்துப் பேரைச்சொன்னால் அவர்களின் சகோதரன், வம்சாவழிதான் நான். அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட வார்த்தைகளை நான் உபயோகப்படுத்துகிறேன். இலக்கிய வார்த்தைகள் எனக்குப் பிரயோசனமாக இருக்கிறது. அதன் அடுத்தகட்டமாக அடுத்த ஊடகமாக நான் சினிமாவை நினைக்கிறேன். நான் ஓரளவுக்கு சுமாரான நாவல்கள் சுமாரான சிறுகதைகள் என்று எழுத முயற்சித்திருக்கிறேன். திரைக்கதை என்று சொல்லும்போது ஒரு பெரிய நாவல் அல்லது 3சிறிய நாவல்களுக்கான உழைப்பு வேண்டியிருக்கிறது.

(தொடர்ச்சி 47ம்பக்கம்)

எங்கள்

# இளந்தளிர்கள்



இளையோர்க்கான பிரத்தியேக இணைப்பு - பூவரசு
வைகாசி - ஆனி - 2004.
திருவள்ளுவர் ஆண்டு 2035

## நல்லதைச் செய்வோம்!

நல்லதை மட்டுமே நாம் எண்ணவேண்டும்
நல்லதை மட்டுமே நான் செய்யவேண்டும்
நல்லதை மட்டுமே நாம் சொல்லவேண்டும்
நல்லதை மட்டுமே நாம் ஏற்கவேண்டும்.


சொல்வதை உண்மையாய் நாம் சொல்லவேண்டும்
சொல்வதை மென்மையாய் நாம்சொல்லவேண்டும்
சொல்வதைப் பிறர்மனம் ஏற்றிடும் வண்ணம்
சொல்வதில் கருத்தினைக் கூட்டிடல் வேண்டும்

கடமைகள் எவையெனத் தெரிந்திடல் வேண்டும்
கடமையைச் செவ்வனே செய்யவும் வேண்டும்
கடமையாய் கற்றவர் துணையினை நாடி
கடமையின் பணிகளைப் புரிந்திடல் வேண்டும்

வாழ்வதோ ஒருமுறை ஆகையால் நாங்கள்
வாழ்வதைச் சரியாக வாழ்ந்திடல் வேண்டும்
வாழ்வதை மற்றவர் சரியாகச் செய்ய
வாழ்ந்துநாம் காட்டவே தெரிந்திடல் வேண்டும்

-சிந்தனைச் செல்வர் **எழிலன்**

**நாம் வாழத் தமிழ் வாழும்**
**தமிழ் வாழ நாம் வாழ்வோம்**



எங்கள் இளந்தளிர்களுக்கான கதை எழுதும்
போட்டியில் பரிசுபெற்ற குட்டிக்கதை:
இந்தக் கதையை எழுதி அனுப்பியவர்:
செல்வி யானுகா ஆனந்தராஜா (பிறேமன்)




## ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

ஒரு ஆட்டுக்குட்டி ஒருநாள்
தண்ணீர் குடிக்க நீரோடைக்கு வந்தது.
ஏதிர்க்கரையில் சிறிது மேலே
ஒரு ஓநாய் குடித்துக்கொண்டிருந்தது.

ஆட்டுக்குட்டியைக் கண்டதும்
ஓநாயின் நாக்கில் நீர் ஊறியது.
ஆகா என்ன அழகான குட்டி!
ருசியான உணவு!

"ஏன்தண்ணீரை நீ ஏன் கலக்குகிறாய?" என்று
கோபமாகக் கேட்டது ஓநாய்.

அதைக்கேட்டதும் ஆட்டுக்குட்டி
பயந்து ஓடாமல் நின்று நியாயம் பேசியது.
"நான் இங்கே கீழே நிற்கிறேன். நீங்களோ
என்னைவிட மேலே நிற்கிறீர்கள்.
ஏன்னால் எப்படி உங்கள்தண்ணீர் கலங்கமுடியும்?"
என்று பதில் பேசியது.



"நீ கலக்காவிட்டால் உன் அப்பன் கலக்கியிருப்பான். அல்லது உன் பாட்டன் கலக்கியிருப்பான். அதற்கான தண்டனையை நீதான் அனுபவிக்கவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டு குட்டியின்மீது பாய்ந்தது ஓநாய்.
அதனைக்கொன்று விழுங்கிவிட்டது.

தீயவர்களிடம் நியாயம் பேசிப்
பயன் இல்லை
அவர்களிடம் பேசாமலும்
விலகி இருப்பதே மேல்.

சொற்தேர்வுப் போட்டியில் இடம்பெற்ற கேள்விகளுக்கான
சரியான விடைகள் பின்வருமாறு:

1. நமது எண்ணங்கள் இங்கிருந்துதான் உருவாகின்றனவாம்
மனம்.

2. இது இருந்தால் எந்தக் காரியத்திலும் வெற்றிபெறலாம்.
வல்லமை

3. இது அதிகரித்தால் எந்த வண்டியும் ஓடாது.
சுமை

4. இது அளவுக்கதிகமானால் ஆபத்தும் உண்டு.
விசை.

5. தொட்டால் சுடுவது
தீ

6. இது இருந்தால் அறிவாளி என்கிறோம்.
அறிவு

7. இங்குதான் நாம் வாழ்கிறோம்.
மாநிலம்

8. இதற்கு தலைதான் பிரதானம் என்பார்கள்.
உடல்

9. கடவுளிடம் இருந்து இதைப்பெறத்தான் எல்லோரும் பிரார்த்தனை செய்கிறார்கள்
அருள்

10. முதலில் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளும்போது இதைப்பற்றித்தான் விசாரிப்பார்கள்.
சுகம்.

11. நமது நல்லசெயல்களுக்கு மற்றவர்கள் இதைச் செய்தாலும் நாம் அதற்காகத் தளராமல் நமது முயற்சியைத்தொடரவேண்டும்.
தடை



# குறள் கவிதைகள்

## 29.கள்ளாமை

களவாடும் நெஞ்சமதை காயத்தில் கொள்ளாமல்
உறவாடும் உள்ளமதே உன்னதமாய் வாழ்ந்து விடும்

பிறர்க்குரிய பொருளைத் தனதாக்கிக் கொள்ள
நினைப்பதுவும் தவறே நித்திலத்தில் தானும்

களவெடுத்து செல்வம் களிப்புறுமாம் முதலில்
அத்தனையும் அழிந்து விடும் அவர்வாழ்வில் ஓர் நாள்

களவென்ற ஒன்றில் அன்புவைப்பையேல்
தீராததுன்பத்தை தீண்டிவிடும் உன்வாழ்வில்

மறந்த நிலைபார்த்து மற்றோர் பொருள் கவர்வோர்
அருள் கருதும் அன்பு அவரிடத்தில் தானேது

வாழ்வெனும் எல்லையை வழிவகுத்திட்டுமே
தாழ்வுடன் வாழ்வைத் தான் ஏற்கவில்லையேல்
பாழ்படும் களவதைப் பாரினில் ஏற்பரே

அளவறிந்து வாழ்வை அளப்பவன் நெஞ்சம்
களவாடும் எண்ணத்தை கருதியும் பாராது

நேர்மையின் நெஞ்சமோ நேர்வழி செல்லுமே
கொள்ளையர் நெஞ்சமோ கொடுமையின் வழியதாம்

களவொன்றைத் தவிர நல்வழியை காணாதார்
வாழ்விழந்து வீழ்வாரே வையத்துள் இங்கே

களவதை நாடினால் வாழ்வே தவறிடும்
களவதை நினைக்கையேல் காணுமோர் புகழது
தளராது தவறாது தரணியில் தானுமே

நா.தேவதாசன்

# பணம்- வாழ்வு- மற்றும் ரசனைகள்.

-பொ.கருணாகரமூர்த்தி.

ஜெர்மனியில் IKEA என்று ஒரு ஆடம்பர தளபாடங்கள் தயாரித்து விற்பனைசெய்யும் மாபெரும் நிறுவனம் இருக்கிறது. அதன் ஒரு காட்சியறையாவது இருக்காத நகரங்களே இல்லை எனலாம். அநேகமாக இந்நிறுவனத்தை அறியாதவர்கள் ஜெர்மனியில் இருக்கவே முடியாது.

அனேகமாக காட்சியறைகள் இருந்தால் நகரத்துக்கு வெளியே நெரிசல் குறைவான இடத்தில் அதன் ஸ்டோர் இருக்கும். ஓடர் பண்ணிய 24மணி நேரத்துள் வாடிக்கையாளருக்கான தளபாடத்தை அங்கிருந்தே விநியோகித்து விடுவார்கள். இங்கே நவீன மோஸ்த்தரிலான தளபாடங்களில் IKEA life style என்பதே ஒரு புதிய TREND என்க. இந்த நிறுவனத்தின் உரிமையாளர் IKEA Adel என்பவர் ஜெர்மனியின் பெரும் பணக்காரர்களில் ஒருவர். அவர் சொத்தின் பெறுமதி தொடர்பான எண்களிலும், சுழியங்களிலும் எனக்கு அவ்வளவுக்கு பரிச்சயம் இல்லாததினாலும் அந்த விவகாரத்தை விட்டுவிடுகிறேன்.

சென்ற பெப்ரவரி மாதம் ஒரு இதழியலாளருக்கு IKEA Adel வீட்டில் என்னவென்ன மோஸ்த்தரிலான தளபாடங்கள் இருக்கும், பாவிக்கிறாரென்று பார்க்கவேண்டுமென்று ஒரு ஆர்வம் தோன்றவும், அவரையணுகி வீட்டில் அவரைச்சந்திப்பதற்கான ஒரு சந்திப்பு இணக்கத்தைப் பெற்றுக்கொண்டு சில படப்பிடிப்பாளர்கள் சகிதம் போய் இறங்கினார்.

போனவர்களுக்கு தாங்கள் வேறு யாரோவொருவர் வீட்டுக்குத் தவறுதலாக வந்துவிட்டோமோ என்று ஒரு சந்தேகம். ஏனென்றால் அங்கே அவர்கள் எதிர்பார்த்த நவீன தளபாடங்கள் எதுவுமே இருக்கவில்லை. சாதாரண மரத்தில் செய்து தென்னந்தும்பைப் போன்றதொரு தும்பில் எளிமையான குஷன் வைத்ததொரு சாய்வு நாற்காலியிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த IKEA Adel எழுந்துவந்து இதழியலாளரையும் அவர் கும்பலையும் வரவேற்கிறார்.

"ஏன் இப்படி?" என்று வியந்தவர்களிடம் Adel சொன்னார்:

"நவீன மோஸ்த்தரிலான தளபாடங்கள் தயாரிப்பதும், அதை சந்தைப்படுத்துவதும் எனது தொழில். எளிமையான தளபாடங்களையே பயன்படுத்துவதென்பது என் ரசனையையும், சௌகரியத்தையும், ஆரோக்கியத்தையும் பொறுத்த விஷயம். பாவனையாளர்களிடம் எனது ரசனைகளைப்பற்றி வகுப்பெடுப்பது என் தொழில் சார்ந்தவேலையல்ல, அது முற்றிலும் வேறு விஷயம்.
வருமானத்தை பெருக்கிக்கொள்ளவேணும் என்ற ஒரு ஆசையில் சிலகாலமுன்பு ஒரு றெஸ்ரோறெண்டை வாங்கியிருந்தேன். அந்தத் தொழிலின் நெளிவு சுழிவுகள்பற்றி எதுவுமே எனக்குத்தெரியாததால் எதிர்பார்த்த முன்னேற்றத்தை ஈட்டமுடியவில்லை.

வருமானம் சரியத்தொடங்கவும் அதனை எனக்கு வாங்கித்தந்த விற்பனை ஏஜெண்டிடம் சென்று "அதை உடனே விற்கவேண்டுமே" என்றேன்.
அவன் "என்ன ஒரு பத்தாயிரம்தான் போகும்" என்றான்.
"ஒரு இலட்சம் மார்க்குகள் வாங்கி உன் பாக்கெட்டுக்குள் வைத்து 6மாசம்கூட இருக்காதே? " என்று அலறினேன்.
அவனோ " உன் றெஸ்ரோறெண்டில் என்னவுண்டோ அதற்குத்தான் யாரும் பணம் தருவான், உன் முட்டாள்தனத்துக்கும் சேர்த்து யாரு பணம்கொடுப்பான்? " என்றான் நிதானமாக.

அலைந்த நாய் 'எதிலோ'போய் விழுந்ததென்பார்கள். அப்படியாக நாம் இருக்கவே கூடாது. உங்கள் ரசனைக்கு இயல்புக்கு எது ஏற்றதோ அதையே செய்யுங்கள். உங்களுக்கு பருத்தியாடைதான் பிடிக்குமா அதையே அணியுங்கள், மற்றவர்கள் அணிகிறார்களேயென்பதற்காக அது பொலியெஸ்டராக வேண்டாம். யாருக்காகவும் எதையும் மாற்றிக்கொள்ளவேண்டாம். பிறரின் திருப்திக்காக உங்கள் இயல்புக்கு பொருந்தாத ஒன்றைச்செய்ய முற்பட்டால் இவ்வாறு அவஸ்த்தைப்பட நேரும்.

ஒரு பணக்காரர் கோல்ப் விளையாடும்போது அவர் பந்தைத் தொலைத்துவிட்டார் வெகுதூரம் தேடித்தேடிச்சென்று ஒருவாறு அதை எடுத்தபின் நிதானமாகச் சொன்னார்: " இனி மைதானத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டியதுதான்."
பணம் தேடும் ஆசையில் வாழ்வின் மிகுதியான நேரத்தைச் செலவழித்து விட்டோமானால் வாழ்வையும் கூடவே தொலைத்துவிடுவோம். ஜாக்கிரதை!

□□□

# இதுபோலும் இல்லை இனி...

பருவத்தே பயிர் செய்தாலே பண்பான பலன் கிடைக்கும் ~ இப்
பாரிலே இதற்கெனப் பல விடயங்கள் உதாரணமாகும்.
உருக்கொண்ட பல கருமங்கள் உள்ளத்தே அமிழ்ந்திருக்கம் ~நீ
உடனுக்குடன் இயங்கினால்தான் உள்ளேயும் சுமை குறையும்
வருகின்ற சந்தர்ப்பத்தை வாலிபத்திலே பயன்படுத்திக்கொள் ~உன்
வாழ்விலே வரும்நேரம் இதுபோலும் இல்லை இனி..

இளமையில் கற்கும் கல்வி சிலையிலே எழுத்தாகும் ~நீயும்
இப்போது கற்றாலே வாழ்வில் எப்போதும் பயனாகும்
முதுமையில் நொந்து நினைந்து முனகுவது மடமை ~தம்பி
மூப்பிலே வரும் ஞானம் முழுமையாய் உதவாதையா.
வளமுள்ள நாட்களை கற்றிட வசமாக்கிக்கொள்ளுதற்கு ~உன்
வாழ்விலே வந்த வாய்ப்பு இதுபோலும் இல்லை இனி.

கனக்கின்ற இதயத்திலுடைய கவலைகளைக் களைவதற்கு ~நீ
காத்திருத்தல் ஒருபோதும் கரங்களுக்கு மருந்தாகாது.
உனக்கென சந்தர்ப்பத்தை இறைவன் உருவாக்கித் தருகையில்
உள்ளத்தைத் திறந்து அவனுக்கு உரைத்திட்டால் சுகமாகும்
தனக்குள்ளே பூட்டிவைத்தால் தவிப்புத்தான் அதிகமாகும் ~நண்பா
தானாக வரும்தருணம் இதுபோலும் இல்லை இனி...

தந்திரமாய்ப் பேசிமயக்கி தமிழரில் வெறுப்பேற்றுகின்ற ~சில
தரங்கெட்ட அரசியல்வாதிகளில் தார்ப்பர்யம் உணர்ந்து
சுந்தர இலங்கைத்தீவின் சுதந்திரம் நின்று நிலைப்பதற்கும்~ முழு
சிங்கள மக்களும் செம்மையாய் சிந்தித்து செயற்படுவதற்கு
சந்தர்ப்பம் இதுவென்று சகல தரப்பினரும் உரைக்கின்ற ~மிகச்
சிக்கனமான சமயம் இதுபோலும் இல்லை இனி...

## பூவரசு 13வது ஆண்டு நிறைவுப்போட்டியில்
## இரண்டாவது பரிசுபெற்ற கவிதை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புரியாததுபோல் சந்திரிகா –தினம்
புதுப்புதுக் கதைகள்சொல்லிப் புளுகு அறிக்கைவிடாமல்
தெரிந்த எங்கள் பிரச்சினையைத் தீர்த்திட நினைக்காது –பகிர்வு
தீர்வைத் திசைதிருப்பினால் தீபகற்பத்துக்கே ஆபத்தாகும்
தரித்த பேச்சுவார்த்தைக்காய் தடையினை நீக்குவதற்கு –வந்த
தார்மீக வாய்ப்பு இதுபோலும் இல்லை இனி.

பந்திக்கு முந்திக்கொண்டு பல்லிளித்தவர் போலல்லாது –நல்ல
பயனான விசயங்களைப்பேசிப் பகிர்வாகப் பெறவேண்டும்
முந்தியகுழுக்கள் போலல்லாது முடிவுகள் சரிவராவிடில் –நம்
முஸ்லிம்களும் இணைந்தே முழுவுரிமையைப் பெறுதல் நலம்
சந்ததிசந்ததியாய்த் தமிழர் சரிசமமாய் வாழ்ந்திட வாய்த்த
சரியான சந்தர்ப்பம் இதுபோலும் இல்லை இனி.

போரிலிருந்த மக்கள்தமைப் பூப்போல காத்ததையும் –அந்த
புதைகுழி விவகாரத்தின் பூட்டினைத் திறந்திடவும்
வேரறுந்த கொடிகளையும் விழுதொடிந்த மரங்களையும் –அவ்
வீணர்கள் கையிலிருந்து விடுவித்து வந்து நீங்கள்
பாரிலே பேரெடுத்த பன்னாட்டுப் பேச்சுக்களில் உரிமை வெல்ல
பாங்காய் கிடைத்த வேளை இதுபோலும் இல்லை இனி.

புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் புகலிடத்தில் வாழ்ந்தாலும் –இப்
பூமியே பொறுத்திடாத புண்களைத்தான் மறக்கலாமோ
நலம்பெற்று நம்கனவு நனவாகும் நாளை ஒன்றாய்– என்று
நம் விடுதலை வீரர்களுக்கு நன்றியோடு கைகொடுத்து
பலம்கொண்ட அணியாக படைதிரட்டி உரிமைபெற –பெரும்
பயனான சந்தர்ப்பம் இதுபோலும் இல்லை இனி

**-அம்பலவன் புவனேந்திரன்**



பொறுமையென்னும் நகையணிந்து
பெருமை கொள்ளவேண்டும் பெண்கள்...

*'அடக்கி ஆள்வதா?
யார் யாரை அடக்கி ஆள்வது?
அன்பினால் அன்றோ ஆளவேண்டும்.
அன்பில்லா இடத்தில் எதுவுமே இருக்க
முடியாது என்று அற்புத வேதங்கூறிய
ஔவையார், இல்லறவாழ்வு வேண்டாம் என்று
வெறுத்து தன் அழகை இளமையை
ஒழித்துக்கொண்ட பெண் புலவர்.
ஆண்புலவர்களால் கவிஞர்களால்
அவ்வப்போது கூரியமுனையில் தாக்கப்பட்டும்,
பரிகசிக்கப்பட்டும் வந்தபோதும் சீரிய
சிந்தனையால் செழுந்தமிழால் கவிமூலம்
வெண்பாக்கள் மூலம் தலைசாய வைத்தவர்
இப் புலவி.எப்போதும் புன்சிரிப்பு, தளராத
நடை, தன்மான உணர்வு இவரது
அணிகலன்கள். இன்று பெண்நிலைக்கெதிரான
புலவி எனப் பேசப்படும் இப்புலவியை
என்சொந்தமான பார்வையின்மூலம் எனக்குள்
மீட்டெடுக்க உன்னும் ஒரு தேடல் இது.*

**கவிதாஞானவாரிதி**
***கோசல்யா சொர்ணலிங்கம்.***

# ஔவை

வனத்தில் மிகுந்த களைப்போடு ஔவை நடந்து போகின்றார்.
ஒரு குடியானவன் தனியனாய் பேசிக்கொண்டிருக்கிறான் - அவன் எதிரில் கிடந்த குத்துக்கல்லொன்றுடன்.
இப்படி அவன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் எவருக்கும் அவனை ஒரு மனநோயாளியாகவே எண்ணத் தோன்றும்.
இவன் ஏன் இப்படித் தனியனாய் நின்று பேசுகிறான் என்றபடி ஔவை அவனை நெருங்குகின்றார்.
இவன் என்ன குத்துக்கல்லுடன் பேசுகிறான்?
-சிந்தித்தபடி, தன்னுடைய பசிக்களைப்பை வெளியிட தன் பாழும் வயிற்றைத் திட்டுகின்றார்.

*ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்*
*இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒருநாளும்*
*என்நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே*
*உன்னோடு வாழ்தல் அரிது.*

உடனே குடியானவன், "என்ன.. பசி வந்தால் வயிற்றைத் திட்டுவது முறையாகுமோ?" என்கிறான். உடனே ஔவை, "குத்துக்கல்லைத் திட்டினால் பத்தினியைத் திட்டினது போலாகுமா?" என்கின்றார். "மிக நடந்து களைத்துவிட்டேனப்பா. நீ கூப்பிட்டால் என்ன கூப்பிடாவிட்டால் என்ன நான் உன்வீட்டிற்கு சாப்பிட வரப்போகின்றேன்" என்கின்றார்.
உடனே அக் குடியானவன், "மிகத் தொலைவிலே என் வீடு. உன்னால் நடந்து வர இயலாது" என்கின்றான்.
"இந்தக் காடு கரம்பையெல்லாம் நடந்துவரும் எனக்கு உன் வீடு தொலைவாகா. என்ன கஞ்சியென்றாலும் உன் வீட்டில்தான் எனக்கு விருந்து." என்றபடி அவனோடு அவன் வீட்டிற்குப் போகின்றார்.
வாசலிலே அமரவைத்துவிட்டு வீட்டினுள்போய் தன் மனைவியிடம், ஒரு வயதான பெண்ணைக் கூட்டிவந்திருக்கிறேன் உணவுபோடு என்று சொல்லாமல், எந்தவிதமாக வெல்லாம் தன் அன்பு நேசம் காதல் ஸ்பரிஸம் இவற்றை வழங்கமுடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் வழங்கியபின்னர் தான் கூட்டி வந்த விருந்தாளி பற்றி கூறுகின்றான். இதற்குப் பின் என்ன நடந்ததென்பது பலருக்கும்தெரிந்த கதை.

*இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன்வாங்கி*
*விருந்து வந்ததென்று விளம்ப - அதிர்ந்துமிக*
*ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்*
*சாடினாள் ஓடோடத்தான்*

ஔவை இங்கே முழுவதையும் அவதானித்துவிட்டு, 'அன்பில்லார் இட்ட உணவை பார்க்கவே கூசுகின்றது' என்றபோது, குடியானவன் மனைவி விரும்பாவிட்டால் நீ வந்திருக்கவே கூடாது என்கின்றாள்.
உடனே ஔவையார், 'வந்தால்தானே உன்பெருமை உலகுக்குத் தெரியும்!'என்கின்றார். அன்பை வளர்க்கும் ஒரு பெண் அகங்காரத்தை வளர்த்திருக்கின்றாயே. உன்னால் பெண்குலத்திற்கே அவமானம்!' என்று எழுந்து விடுகின்றார்.
பத்தாவுக்கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி இருக்கலாம் சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமல் சந்நியாசம் கொள்! என்றபடி விலகிப் போகின்றார். விருந்துண்ணாது.
இங்கே பாருங்கள் ஔவையாரின் கூற்று பொதுமை உணர்வோடுதான் பேசப்பட்டது. இதை நம்மவர்கள் ஊன்றிப் பாராது எடுத்தகாரியங்களுக்கெல்லாம் பெண் சம்மதிக்காவிட்டால் இந்த உவமானத்தைக் கையாள்கின்றனர். இதையே பெண்களும் ஔவை தமக்கு பிழை செய்துவிட்டார் என்று நோக்கினர்.

வயதான ஒரு பெண்ணுக்கு ஒருவேளை உணவுகொடுக்க இயலாக இந்த மனைவியின் நடப்பை யாரால்தான் ஒப்புக்கொள்ள முடியும்?
இன்று புலத்தில் ஈழத்தில் இந்தியாவில் நிறைந்த வெறியுணர்வோடு அராஜகத்தோடு 'நான் என் நண்பர்களைக்கூட்டி வருகின்றேன். இரவு சாப்பாடாக கடல் உணவோடு கறியும் வை!' என்று ஒரு தொலைபேசியில் கூறிவிட்டு வீட்டில் கும்மாளம்போடும் ஆண்களுக்க நடுவே பெண்களும் உள்ர்.

இதே போன்ற ஆண்களும் உள்.

இந்தவேளையில் பத்தாவுக்கேற்ற பதிவிரதையாய் இரு இல்லாதுபோனால் விவாகரத்து செய்துவிடுவேன் என்று மிரட்டும் ஆண்கள்நடுவே அன்று அக்குடியானவன் வாழ்வியல் பார்த்த ஒளவை அந்தப் பெண்ணைச் சாடிப் பாடியது தவறா? இல்லறம்என்பது இருவரும் ஒத்துணர்ந்துபோகும் ஒரு வாழ்வு இல்லையா?
சமத்துவம் என்று பார்க்கும்போது ஒளவை அப்பெண்ணை அப்படிக் கண்டித்தது தவறா? அதனால் ஒளவை பெண்ணுக்குப் பிழையானதையும் ஆண்களுக்கு வக்காலத்தும் தன் பாடல்மூலம் அறிவின் மூலம் ஓரவஞ்சனை செய்யவில்லையே.

அதேபோன்று இன்னோரிடத்தில் ஆண்களுக்கும் அறிவுரையும் வாழ்வியல்பற்றியும் குறிப்பிடுகின்றார். (அதுபற்றி பின்னால் எழுதுகிறேன்)

இறுதியாக குடியானவனின் மனைவி தன் பிழையை உணர்ந்து மன்னிப்புக்கோரி ஒளவையின் காலில் விழுந்து விடுகின்றார்.
"நீ கும்பிடவேண்டாம். உன் குணத்தை மாற்றிவிடு என்றபோது அந்தப்பெண் எனக்கு அவரிடம் அன்புண்டு ஆனால் கொஞ்சம் காரசாரமாக இருந்தால்தான் புருஷனை அடக்கி ஆளலாம். சிரித்துப் பேசுவதைக் குறைத்துக் கொள் என்று பெரியவர்கள் சொல்லித் தந்தார்கள்" என்கின்றாள்.
"அடக்கி ஆள்வதா? யார் யாரை அடக்கி ஆள்வது?அன்பினால் அன்றோ ஆள வேண்டும். அன்பில்லா இடத்தில் எதுவுமே இருக்க முடியாது. காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்வதே வாழ்வாகும்.

இந்த வரலாற்றின் குறிப்பில் ஆணிலை ஆளுமைகொண்டு நிற்காதபோது பெண்ணிலையே இல்லறத்தில் பேதங்காட்டாதே என்றது தவறானதா?
அக் குடியானவன் பெண்ணாதிக்கம் கொள்ளாதபோது ஏன் ஆண்களை அவ்வேளை சாடவேண்டும்.?
(தன் மனைவியைத் துன்புறுத்தும் குடியானவன் ஒருவனை ஒளவை தட்டிக் கேட்கும்பாங்கினை இன்னோரிடத்தில் பார்ப்போம்)

அன்றாடம் பல அவதிகளைச் சுமந்துவிட்டு களைத்துப்போயிருக்கும் மனைவியைப் பார்த்தும் அல்லது அராஜகத்திற்குத் துணைநிற்காது நீதிகேட்கும் பெண்ணைப் பார்த்தும் பொறுமையென்னும் நகையணிந்து பெருமை கொள்ளவேண்டும் பெண்கள் என்று பாடி உதாரணம் காட்டிச் சொல்லியோ, அல்லது எடுத்ததற்கெல்லாம் இதை உதாரணம் காட்டியோ, பெண்ணை ஒடுக்கிவிட்டாரே ஒளவையென பெண்களும் நொந்து விடுவது தவறன்றோ?

(தொடரும்)

# சிந்தனைத் துளிகள்.

☐ அறிதலும் அறிவூட்டலுமே மனிதத்துவத்தின் அத்திவாரங்கள்

☐ நல்லதை அறிதல் கெட்டதை அறிதல் இரண்டுமே அவசியமானவை. ஆனால் அவற்றைப் பிரித்தறிதலே அத்தியாவசியமானது.

☐ கேட்பதில் அக்கறையுள்ளவன் அறிவாளி. ஆனால் கேட்டுக்கொண்டுமட்டும் இருப்பவன் ஏமாளி.

☐ படிப்பாளி பாடங்களை மனத்திற்குள் பதித்திருப்பான் அறிவாளி உலகத்தையே உள்ளத்துக்குள் வைத்திருப்பான்

☐ பட்டப்படிப்பில் தேறிய சோம்பேறியைவிட படிப்பறிவற்ற தொழிலாளி மதிக்கப்படத்தக்கவன்

☐ உண்மைகளை உணரவைப்பது மனிதத்துவ வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது எழுத்தாளன் அதைக்கடமையாக ஏற்கும்போது எழுத்து அவனால் ஆளப்படுகிறது.

☐ மேடையில் நடிப்பவனைப் பாராட்டினால் நாம்அவனது திறமையைப்பாராட்டுகிறோம் என்று பொருள். ஆனால் சமுதாயத்தில்வேடம்போட்டு நம்மை நல்லவன்போல் ஏய்க்கிறவனைப் பாராட்டுகிறோமென்றால் நாம் மூடர்கள் என்று பொருள்.

☐ நிலை உயர செயல் மாறுவோன் பணமுள்ள பிச்சைக்காரன். அவன் பட்டுப்போர்வை போர்த்திவிடப்பட்ட பன்றிக்கு ஒப்பானவன்.

☐ ஆலயம் தொழுதல் சாலவும்நன்று. அடுத்தவர்க்கு உதவுதல் அதைவிட நன்று.

**- சிந்தனைச் செல்வர் எழிலன்**

(புதியதல்ல புதுமையுமல்ல நூலில் இருந்து)

போக சக்தியை ஞான சக்தியாக மாற்றும்

# யோகக் கலை

-மகேந்தி

கடந்த பூவரசு இதழ்களிலே சக்கரங்கள்பற்றிய உயிரோட்டமான விளக்கத்தையும் அவை ஒவ்வொன்றும் சுரக்கும் நீரின் முக்கியத்துவம், அவற்றின் தன்மையைத் துரிதப்படுத்தும் யோகப்பயிற்சிபோன்ற பல சீரான விடயங்களைப் பற்றிக் கவனித்தோம்.


இந்தக் கட்டுரைத் தொடரின் முதல்பகுதியில் பெண்களுக்கான பயிற்சிகளும், இரண்டாவது பகுதியில் ஆண்களுக்கான பயிற்சிகளும் அதன் தொடர்ச்சியான ஏனைய பயிற்சிகள் இந்த இதழிலும் தரப்பட்டுள்ளன.
இந்தக் கட்டுரை தொடர்பாக வாசகர்களுக்கு ஏதேனும் கேள்விகள் தோன்றுமிடத்து அதுபற்றி பூவரசுக்கு தெரியப்படுத்துங்கள். கட்டுரையாளர் திரு. மகேந்தி அவர்களிடமிருந்து பதில்கள் பெற்றுத் தரப்படும்.

இனி பயிற்சிகளுக்குள் நுழைவோம்:

## பயிற்சி 4.

அன்பு, கௌரவம், கலையுணர்வு, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மாண்பு, நோய் எதிர்க்கும் சக்தி என்பனவற்றிற்குக் காரணமாயிருக்கும் சக்திநிலையமான Anahataசக்கரத்தையும் அதன்சுரப்பியான கழுத்தின் அடிப்பாகத்தில் நாளமில்லா அமைந்திருக்கும் தைமஸ் (Thymus gland) சுரப்பியையும் ஊக்குவிக்கும் பயிற்சியைப் பயில்வோம். இதிற் சுரக்கும் ஹோமோன்கள் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்யும் வல்லமை உள்ளவை.

4.1. நேராகத் தரையில் நிற்கவும். கால்களை ஒன்றாக வைத்துக் கொள்ளுங்கள். பின் படத்திற் காட்டப் பட்டதுபோல் சற்று பின்நோக்கி வளைந்து கைகளை உயர்த்தி பின்பக்கமாகத் தொங்குமாறு பிடித்துக் கொள்ளவும். உள்ளங்கை முன் பக்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். விரல்கள் சேர்ந்து இருத்தல் வேண்டும்.



4.2. பின்பக்கமாக சரியும்போது சுவாசத்தை உள்நோக்கி இழுக்கவும்.

4.3. சிறிதுநேரம் மூச்சை அடக்கிய வண்ணம் அப்படியே நிற்கவும்.


4.4. பின் மூச்சை வெளியேவிட்டவண்ணம் கைகளை முன் கொணர்ந்து நிமிர்ந்து நேராக நிற்கும் நிலைக்கு வரவும்.

4.5. தொடர்ந்து இப்பயிற்சியை 9 அல்லது 18 முறைகள் செய்யவும். (இப் பயிற்சியின்போது இச்சக்கரத்தின் நிறம் பச்சை, மந்திர ஒலி 'யாம்' படத்தில் நட்சத்திரமிடப்பட்ட இடம் இவற்றை மனத்தில் நிறுத்தவும்.)

4.6. பின் தரையில் மல்லாக்கப் படுத்துக்கொள்ளவும். கால்களை நீட்டி உள்ளங்கை மேற்பக்கமாக இருக்குமாறும் விரல்களை ஒன்றாகச் சேர்த்தும் பிடித்த வண்ணம் 9 அல்லது 18 முறைகள் மூச்சை நன்றாக உள்ளெடுத்து மெதுவாக வெளியே புன்சிரிப்புடன் விடவும். (இடைநிறுத்தாத மூச்சுப்பயிற்சி நல்ல பலனைத் தரும் என்பதனையும் நட்சத்திரமிடப்பட்ட இடத்தில் செலுத்தப்படும் கவனமும் இச்சக்கரத்தின் ஒலியான 'யாம்'இன் ரீங்காரமும் பச்சை நிறத்தை கவனத்திற்கொள்ளலும் மிகவும் பயனைத் தருவனவாகும். நாளடைவில் பழகிக்கொள்ளவும்.

4.7. மெதுவாக எழும்பவும்.

பயிற்சி 5.



உயிரியல் இரசாயன மாற்றம் (metabolism), சக்திச் சேகரிப்பு, நரம்புக் கோளங்களின் சரியான தொழிற்பாடு, பல் எலும்பு இவற்றிற்குத் தேவையான கல்சிய ஊட்டச்சத்து, இவற்றிற்குத் தேவையான கோமோன்களைச் சுரப்பதும் குரல்வளைக்குக் கீழ் கழுத்தின் இருபக்கத்திலும் நாளமில்லா அமைந்த தைரோய்ட் சுரப்பியையும் (thyroid gland) பிறருடன் தொடர்பு வைக்கும் தன்மை, நான் என்ற உணர்வு மன ஒருமைப்பாட்டுச் சக்தி நியாயமானதும் விவேகமானதுமான சிந்தனை தமக்கென்ற பிரத்தியேக குணம் இவற்றிற்குக் காரணமாயுள்ள Vishuddha சக்கரத்தையும் ஊக்கப்படுத்தும் பயிற்சியை இனிப் பயில்வோம்.

5.1. தரையில் நிமிர்ந்து மல்லாக்கப் படுக்கவும்.

5.2. கட்டைவிரல் உள்வருமாறு இருகைகளையும் பொத்திப் பிடிக்கவும்.

5.3. குதம் நிலத்தில் முட்டாமலிருக்க பொத்திய கைகள் இரண்டையும் குதத்தின் அடியிற் தருக.


5.4. 9அல்லது18முறைகள் அமைதியாக மூச்சை மூக்கால் இழுத்து வெளிவிடவும். (இந்தச் சக்கரத்தின் நிறம் மெல்லிய நீலம். மந்திர ஒலி 'ஹம்' என்பவற்றைக் கவனத்திற்கொண்டு மூச்சுவிடும்போது, படத்தில் முட்டைவடிவத்திற் காட்டப்பட்ட இடத்தில் கவனம் செலுத்தவும். ஹம் ஹம் என்ற ஒலியை மனதில் ரீங்காரமிடச் செய்யவும்.)

5.5. கால்களை மெதுவாகக் கீழேகொணர்ந்து கைகளை உள்ளங்கை மேலிருக்கும் வண்ணம் விரல்களை சேர்த்துப்பிடித்துக்கொண்டு 9 அல்லது 18முறை மூச்சை இழுத்து வெளிவிடவும். (நிறம் நீலம் ஒலி ஹம், படத்தில் முட்டை வடிவத்திற் காட்டப்பட்ட இடம் இவற்றைக் கவனித்துக்கொள்ளவும்.

5.6.)
மெதுவாக எழும்பவும்.

## பயிற்சி 6.

தன்னம்பிக்கை, படைக்கும் ஆற்றல், உள்ளுணர்வு,கற்பனா சக்தி போன்றவற்றிற்கும் காரணமாயிருக்கும் ajna சக்கரத்தையும் அதன் சம்பந்தப்பட்ட சுரப்பியான மூளையின் அடிப்பாகத்திலுள்ள Pituitary glandஐயும் ஊக்குவிக்கும் பயிற்சியைப் பயில்வோம். இச்சுரப்பியே உடலிலுள்ள நாளமில்லா அத்தனை சுரப்பிகளையும் இயங்கச் செய்கின்றது என்றும் நரம்புத் தொகுதியின் வலுமை நோய் எதிர்ப்புச் சக்தியின் வன்மை போன்றவற்றிற்கும் உறுதுணையாகத் தொழிற்படுகிறது என்பதனையும் சிரசிற் கொள்வோம்.



6.1. கால்களை நீட்டியவாறு தரையில் அமரவும். கால்கள் இரண்டையும் கூட்டி வைத்துக்கொள்ளவும். உள்ளங்கை மேலிருக்குமாறும் காலில் கைகளை வைக்கவும்.

6.2. முழங்காற் பகுதிகளிலோ நாரிப்பகுதிகளிலோ எந்தவித நோவும் இழுவையும் ஏற்படாத நிலையில் முன்பக்கமாகக் குனியவும்.

6.3. தலையை முன்நோக்கி சாதாரணமாகத் தொங்கவிடவும். புன்சிரிப்போடு செயற்படவும்.


6.4. 9 அல்லது 18 முறை மூச்சை மெதுவாகவும் நிதானமாகவும் உள்ளே இழுத்து வெளியே விடவும். (இச்சக்கரத்தின் நிறம் கடும்நீலம், மந்திரம் 'க்ஷாம்' என்பதைக் கவனத்திற்கொண்டு மந்திர ஒலியை மனதில் ரீங்காரமிடச் செய்த வண்ணம் பிடரியிற் குறியிட்டுக் காட்டப்பட்ட இடத்தில் கவனத்தைச்செலுத்தி பயிற்சி செய்யின் அதிக பலன் கிடைக்கும்.

6.5. நிமிர்ந்து படுத்துக்கொள்ளவும். உள்ளங்கை மேல்நோக்கி இருக்குமாறு விரல்களைக் கூட்டி வைத்துக்கொண்டு 9 அல்லது 18 முறை மூச்சை நிறுத்தாது மெதுவாக உள்ளெடுத்து வெளியேவிடவும். (மந்திரம், நிறம், படத்தில் குறியிட்டுக் காட்டப்பட்ட இடம் என்பவற்றில் செலுத்தும் கவனம் அதிக பலனைத் தரும்.)

6.6. மெதுவாக எழும்பவும்.

## பயிற்சி 7.

பிரபஞ்ச இணைவு, ஆன்மீக சக்தி, பரிசுத்த சக்தி, மதநம்பிக்கை, தன் உள்ளத்தைப் புரிதல், உட்பார்வை இவற்றிற்குக் காரணமான Sahasrara சக்கரத்தையும் அதன் சுரப்பியுமான பிடரியிலுள்ள Zirbel சுரப்பியினதும் இயக்கத்தை ஊக்குவிக்கும் பயிற்சியை இறுதியாகப் பயில்வோம்.இச்சுரப்பியானது கண்மணிகள் ஊடே காலை வெளிச்சத்தைப் பெற்று மாலையில் Endophine கோமோன்களைச் சுரந்து கலங்களைப் புதுப்பிக்கவும்,மன அழுத்தம் வராது தடுக்கவும், நித்திரை விழிப்புநேரம் இவற்றை சரிவர அட்டவணைப்படுத்தவும் ஏதுவாகவுள்ளது.



7.1. நிமிர்ந்து மல்லாக்கப்படுத்துக்கொள்ளவும். கால்கள் சேர்ந்தவண்ணமாகவும் உள்ளங்கை மேல்நோக்கியும் கைவிரல்கள் ஒன்றாகச் சேர்ந்தவண்ணமும் இருக்கவேண்டும்.

7.2. உச்சந்தலையிலே படத்தில் தாமரைப்பூ இட்டுக்காட்டப்பட்ட இடத்தில் கவனத்தைச் செலுத்தவும்.

7.3. சுவாசிக்கும்போது வெண்மையான ஒளி தங்கள் உச்சியினூடே உடுருவி பாதங்களினூடாக வெளியேறுவதாக கற்பனை செய்துகொள்ளுங்கள்.

7.4. 9 அல்லது 18 முறைகள் சுவாசிக்கவும். (இச்சக்கரத்தின் நிறம் ஊதா, மந்திர ஒலி 'ஓம்'. தாமரைப்பூவால் படத்தில் காட்டப்பட்ட இடத்தை சிந்தனையில் நிறுத்துங்கள்.)

7.5. மெதுவாக எழும்பவும்.

☐

**பிற்குறிப்பு:**

*பயிற்சி முடிந்ததும் ஒரு கிளாஸ் நீர் அருந்தவும்.*
*உள்ளுறுப்புச் சுத்திகரிப்பிற்கு உதவியாக இருக்கும்.*
*இதற்கு முதல் வெளியான இதழ்களில் உள்ள பொதுவான விடயங்களைக் கிரகித்துக் கொள்ளவும்.*

நான் எந்த ஏணிப்படியில் நிற்கிறேன் என்பதைப் பார்க்காமல் என்னை ஒரு இலக்கியவாதி என்றே வைத்துக்கொள்ளலாம். சினிமாவும் இலக்கியம் என்பதால்.
அற்புதமான பல இலக்கியவாதிகளை நான் சந்தித்திருக்கிறேன்.
கண்ணதாசனிடம் நான் எழுதிய கவிதைகளைப் படித்துக் காட்டியிருக்கிறேன். அவர் திருத்தங்கள் செய்து தந்திருக்கிறார். வைரமுத்துவுடன் பழகியிருக்கிறேன். ஞானக் கூத்தன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், பாலகுமாரன், சுப்பிரமணிய ராஜு, மாலன், புவியரசு இன்னும் நிறையப்பேர்..
பாதி இலக்கியங்கள் நான் படித்ததைவிட கேட்டதுதான்.
நான் கிருபானந்தவாரியாரின் இரசிகன், பாலகிருஷ்ண சாஸ்திரிகளின் இரசிகன். இந்த அனுபவங்கள் என்னைச் செழுமைப்படுத்தியிருக்கிறது. அறிவுரை சொல்லும் நிலையில் நான் இல்லை என்றாலும் தமிழில் நடிப்பவர்கள், திரைக்கதை எழுதுபவர்கள், தமிழ் இலக்கியத்துடன் தொடர்பு உடையவர்களாக இருக்கவேண்டும்.
இலக்கியம் என்பது ஜனரஞ்சகப் பத்திரிகைகளில்வரும் இலக்கியம் மட்டுமல்லஅதுவும் இலக்கியம்தான். அப்போது ஒளித்து இருட்டடிப்புச் செய்யப்பட்ட இலக்கியங்கள் பல இப்போது வெளிச்சத்துக்கு வருகின்றன.
பெரும்பணத்தை வட்டிக்குக் கொடுத்துவிட்டு பத்துப் பைசா பிச்சைக்காரனுக்குப் போட்டுப் புண்ணியம் தேடிக்கொள்பவர்கள் இல்லையா, அந்தமாதிரி இலக்கியம்சார்ந்த விடயங்களைப் பெரிய பத்திரிகைகள் செய்துகொண்டிருக்கின்றன. இதை நான் கேலியாகச் சொல்லவில்லை. அவர்களுக்கு நான் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். எனது படத்தை முதல்பக்கத்தில் போட்டதைவிட அதிகநன்றியை நான்அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுவது இந்தமாதிரி முயற்சியை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழ் வாசகர்களின் புண்ணியம் சேரும். வாழ்த்துக்கள் சேரும்.

**இலக்கியவாதியான திரு.கமலஹாசன் அவர்களது கருத்துக்களோடு ஏன்இந்தக் கட்டுரைத்தொடரை ஆரம்பித்திருக்கிறேன் என்பதைப் பிறகு சொல்கிறேன்.**

**—அழகுக்கோன்**

அடுத்த இதழில்...
திரைப்படங்களில் இலக்கியம் பகுதியில் இரண்டு திரைப்படங்கள்
**இரத்தக் கண்ணீர், அன்பே சிவம்**
அழகுக்கோனின் இலக்கியம் தேடும் பார்வையில்...

பூவரசு 13வது ஆண்டு நிறைவுப் போட்டி
இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை.

# வாழ்வு வளம்பெற...

வாழ்வு வளமாக அமைந்துவிட்டால் நாமனைவரும் மகிழ்ச்சியில் திளைக்கலாம். ஆனால் நிஜவாழ்வில் நாம் காண்பது...?

வளமான வாழ்வு வாழ்வதற்காக ஓயாது ஓடிக்கொண்டிருக்கிறோம்.
மகிழ்ச்சி என்பது யாசித்துப் பெறக்கூடிய பொருளல்ல, உழைப்பாலேயே பெறமுடியும்.
மனித உழைப்பும் இரண்டு பக்கங்களைக் கொண்டிருக்கிறது.
பொருள்தேடத் திருடுபவனும் திட்டமிட்டுச்செயல்படுகிறான். தொழிலதிபரும் தன் தொழிலை மேம்படுத்தத் திட்டமிட்டே செயல்படுகிறார். இந்தவிடத்தில் மனிதமூளை சரியான முறையில் சிந்திக்கவேண்டும்.
செய்யவிருக்கும் செயல், அதன் பலாபலன்பற்றி ஒவ்வொரு மனிதரும் சிந்தித்து செயற்பட்டால் பயனற்றவைகளையும் தீமைகளையும் தவிர்க்கலாம்.
சாதாரண குடிமகனான ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டின் சனாதிபதியாக உயர வழிகாட்டியது சிறந்த சிந்தனையென்றால் மிகையாகாது.
வரலாறு என்னைப்பற்றி ஒருவரி எழுதிக் கொண்டால் போதும், 'அவன் முட்புதரை அழித்துவிட்டு அங்கே ஒரு ரோஜாச் செடியை மலரவைத்தான்' என்று.
— இப்படி லிங்கன் கூறியது நாம் வாழ்வில் வளமாக வாழ, செல்லவேண்டிய வழி இதுதான் என்பதை அனைவரும் உணரவேண்டும் என்பதற்காகவே.

வாழ்வு வளமாக அமைய செய்யவேண்டிய காரியங்கள் நிறையவேயுள்ளன. அதில் முதலாவது நமது சுகநலத்தைப் பேணவேண்டும்.
புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களில் பெரும் பங்கினர் பொருள் சம்பாதிப்பதை எளிதாகவும், சுகநலத்தைச் சம்பாதிப்பதை மிக மிக கடினமானதாகவும் கொண்ட வாழ்க்கையைக் கொண்டுள்ளனர் என்பது மறைக்க முடியாத உண்மை. முன்பின் அறிமுகமில்லாத சமூகப் பழக்கவழக்கத்தோடு ஒட்டி வாழவேண்டிய சூழ்நிலையில் மனம்தடுமாற உணர்வுகள் பாதிக்கப்பட்டு, உடல்,உள உபாதைகள் மிக இலகுவாகத் தொற்றிவிடுகின்றன.
நடைமுறை வாழ்வில் நாம் காணும் இளவயதினரின் இயற்கை மரணங்கள் இதையே காட்டுகின்றன. அடுத்து பிள்ளைகளின் வாழ்க்கைமுறையும் பல சிக்கல்களைத் தோற்றுவிப்பதைக் காணமுடிகின்றது. அண்டை அயலவரின் பழக்கவழக்கங்களைப்

பார்த்தே பல விடயங்களை நம் பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர். எமது வாழ்க்கைமுறை எதுவென்று அறியாத அத்தனை குழந்தைகளும் தமது கருத்தை மறுக்கும் பெற்றவர்களை மதிக்கத் தவறுபவர்களாகவும் முரண்டு பிடிப்பவர்களாகவும் மாறி வருகின்றனர். விதிவிலக்காக சிலர் பெற்றோருக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பதற்காகத் தமக்குள்ளேயே போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்விடத்தில் விழிப்பாக நடக்கவேண்டியவர்களாகவும் இளைய சந்ததி வளமான வாழ்க்கை அமைக்க வழிகாட்டிகளாகவும் பெற்றோர் இருக்கவேண்டும். நாம் வாழும் நாட்டுப் பழக்க வழக்கங்களை முற்றிலும் புறக்கணிக்காது நமது நல்ல பழக்கவழக்கங்களையும் நயமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.
எடுத்துக்காட்டாக சிலவற்றைப் பார்ப்போம்.
மேலை நாட்டாரிடையே மிகச் சாதாரண வாழ்வில் காணக்கூடிய மன்னிப்புக் கேட்டல், முன் அனுமதி பெறுதல் என்ற இரண்டு விடயங்களும் நம்மவர் வாழ்வில் எந்தளவு முக்கியம் பெறுகிறது என்பதைப் பார்த்தால் புரியும் —
கணவன் மனைவியிடம் மன்னப்புக்கேட்கும் பண்பு நம்மிடையே அத்திப் பூப்போல அருமையக நிகழ்கிறது.
முன் அனுமதி பெறுதல் என்பதும் அறவே கிடையாது.
எந்தநேரம் என்று பாராது வீட்டுமணியை அழுத்தி அடுத்தவரைத் தொந்தரவு படுத்துவது பற்றித் தமிழர்கள் கவலைப்படுவதேயில்லை. இந்த நிலையில் சில பெரியவர்கள் நிலைமையைச் சமாளிக்கின்றனர். லர் தம் குழந்தைகள் மூலம் பதிலளித்து கதவைத் திறப்பதில்லை. இந்தச் சிறு விடயம் விளைவிக்கும் கெடுதியோ மிகக் கொடிது. பிள்ளைகள் பொய் பேசிக்கொள்வதையும் தன்னம்பிக்கையின்றி ஒளிந்துகொள்வதையும் வாலிபவயதில் செய்யும்போது பெற்றவர்கள் தலையைப் பிய்த்துக் கொள்கின்றனர்.
பெற்றவர்கள் மனத்துணிவோடு நல்ல பழக்கங்களை பயிற்றுவிக்கும்போது பிள்ளைகளிடம் செவிமடுக்கும் பண்பு இயல்பாகவே பிறக்கும். வளமான வாழ்வும் அமையும். நாம் வளமாக வாழ்வதற்கு உடல் உள ஆரோக்கியத்தோடு, சமூக ஆன்மீக நலன்களும் நிச்சயம் பேணப்படவேண்டும்.
புலம்பெயர்ந்து வாழும் நம்மவரிடையே உடல் நலத்திற்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறையுள் வசதி பெரும்பாலும் சீராகவே உள்ளது. இருப்பினும் பலர் உடல் உள ஆரோக்கியம் குன்றியவர்களாகவே காணப்படுகின்றனர். அதிலும் பெரியவர்களில் குறிப்பிடத் தக்களவு தொகையினர் அங்கவீனர்களாக மாறியிருக்கின்றனர். வளமாக வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு தாயகம் விட்டு வந்த இவர்கள் இங்கு சுகமாக வாழமுடியாத நிலையைச் சந்திக்கும்போது மன உணர்வுகள் பாதிக்கப்பட்டவர்களாக உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாகின்றனர். இந்த நிலை பெரும் தொகையானவர்களை சலரோக வியாதிக்காரர்களாகவும், சிறு தொகையினரை பாரிசவாதம்போன்ற அங்கவீனராகவும் மாற்றி இருக்கின்றது.

வெளிப்பார்வைக்கு சுறுசுறுப்பாக ஓடித் திரிந்து உழைத்தவர்கள் நித்திய நோய்க்கு ஆளாகக் காரணம் என்ன? அவர்கள் வளமான வாழ்க்கையைப் பணம் தரும் என்று நம்பி உளத்தைப்பேணத் தவறிவிட்டனர். உடலுக்கு ஓய்வும், உள்ளத்திற்கு மகிழ்வும் வேண்டி ஊர்சுற்றி மகிழத் தமிழர்கள் பெரிதும் முனைவதில்லை.

இங்குள்ள வாழ்வியல் முறையில் விடுதலை என்பது வளமான வாழ்வுக்கு வேண்டியதொன்று. தாயகத்தில் வாழ்வு முழுவதும் பறவைகளோடும் பூக்களோடும் செல்லப்பிராணிகளோடும் பேசிப் பேசியே வாழ்வைக் கழித்தோம்.தென்றலும் வசந்தமும் வாசல் தேடிவந்து மனத்தை நிறைத்தது.
சன்னலும் கதவும் பூட்டிய இருட்டு அறையில் எந்தமனிதனும் அடைபட்டுக் கிடந்து புளுங்கியதில்லை. ஆனால் இங்கு எல்லாமே இழந்துவிட்ட கையறுநிலையே காணப்படுகின்றது. மனந்திறந்து பேசவும், இன்முகம் காட்டி கேட்கவும், அன்புவார்த்தைகளை பகிரவும் ஆட்களில்லாமல் ஒவ்வொரு குடும்பமும் வாழ்கின்றது. இதுதான் வளமான வாழ்வா?

ஊரைப்பிரிந்து வந்தோம், உறவைப் பிரிந்து வந்தோம். என்று சலிப்படையாமல் இருப்பவர்களே இனிமையான வாழ்க்கையை அமைக்க முயலவேண்டும். பெரியவர்களும் சிறியவர்களும்கூடி நல்ல சிந்தனைகளைப் பகிரும்போது மனம் இலேசாகும். பலம் பெருகும். அதுபோலவே ஒவ்வொரு குடும்பமும் கூட்டுப் பிரார்த்தனை செய்வதை தமது நாளாந்தக் கடமையாகக் கொள்ளவேண்டும். பிரார்த்தனையும் தியானமும் தரும் சுகத்தை வேறு எவராலும் தரமுடியாது. பகட்டுக்காகக் கோயில் கட்டி பேருக்காகப் பூசை செய்வதால் பயன் கிட்டாது. நமது ஆத்ம திருப்திக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும். நுமது மனம் திருப்தி யடையுமாயின் அதுவே சுகம் என்று சொல்லப்படுகின்றது. அதுபோல நாம் நல்லாரோக்கியமாக வாழ்கின்றோமாயின் அதுவே பெரிய பெறுபேறாகும்.

நமது வாழ்வு எம்பெற முதலில் நாம் வாழ்தலில் நம்பிக்கை கொள்ளவேண்டும். ஒவ்வொரு செயலிலும் நாம் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையுடன் செயல்படவேண்டும். அந்த சிந்தனையே உற்சாகத்தையும் உள்ளத்தில் மகிழ்வையும் நிலைத்து நிற்கச் செய்யும். நான் தோற்றுவிடுவேன், என்னால் முடியாது என்று எண்ணுபவனுக்கு எப்போதும் பயம், தடுமாற்றம் இருந்துகொண்டே இருக்கும். வாழ்நாள் முழுமையும் சஞ்சலம்தான் அவனது உள்ளத்தில் நிறைந்திருக்கும்.
இயேசுகிறிஸ்து நாதர் தனது மலைப் பிரசங்கத்தில் சொன்னதாவது —
'வாழ்க்கையில் உடையைப்பற்றியோ, உணவைப்பற்றியோ, உடலைப்பற்றியோ கவலைப்படுவதைவிட மேலானது ஒன்று வாழ்க்கையில் உண்டு!' என்று உணர்த்தினார் அது வேறு எதுவுமேயல்ல.
எமது வாழ்க்கையை நடத்திச்செல்லும் பரம்பொருளேயாகும்.

உழைப்பும் முயற்சியும்மட்டும் வளமான வாழ்க்கைக்கு போதுமென்று எண்ணிவிடக் கூடாது. உழைத்துக் களைப்படையும்போதும் தோல்வியால் துவளும்போதும் மன உறுதியே எம்மைத் தாங்கி நிற்கும். இந்த மன உறுதி ஆன்மிகத்தினால்மட்டுமே வலுவடையும்.

வாழ்வு வளம்பெற நாம் பலத்தை அதிகரிக்கும் வழியில் செல்லவேண்டும். புலம் என்பது உடல் உள்ளம் இரண்டும் சார்ந்ததே. இதில் உளபலத்திற்கு ஆன்மிக வளர்ச்சியே அவசியமாகிறது.
'அறனறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை
திறனறிந்து தேர்ந்துகொளல்' என்று சொன்ன வள்ளுவர்வாக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அறிவறிந்த மூத்தோரை வழிகாட்டிகளாகக்கொண்ட சமூகம் வாழ்வில் செழிப்படையும் என்ற எண்ணம் எல்லார்மனத்திலும் பதியவேண்டும். இதுபோலத்தான் தமிழ்மூதாட்டி ஔவையாரின் கருத்தும். கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கோடாமை கோடிபெறும் என்றுளது. எனவே அறிவில் மூத்தவர்கள், ஆற்றலில் சிறந்தவர்கள், ஆதாயம் எதிர்பாராமல் ஆன்மீகப்பணிசெய்து எமது சமுதாயம் வளமாக வாழ வழிசெய்யவேண்டும். சினிமாவுக்குப் போவதுபோல் கோயிலுக்குப் போவோர் தம்மைத் திருத்தி ஆலயம் என்றால் ஆன்மாக்கள் ஒடுங்குமிடம் என்பதை நினைவில்கொள்ளவேண்டும்.

எது தேவை எப்போது தேவை என்பது எமக்குத் தெரியவேண்டும்.
அண்டா குண்டாவில் அவித்து அன்னதானம் வழங்க ஆசைப்படுபவர்கள் நாலு அறிவு நூல்களை அச்சிட்டு உதவலாம். இங்கு வீடுகளில் நல்ல நூல்களைக் காண்பது அரிதாகிறது. தேவாரம், திருவாசகம், இதிகாச புராணங்கள், திருக்குறள், நாலடியார் போன்றன நம்மவர்களின் வீடுகளில் இருப்பது மிகக்குறைவு.
இவை எவ்வளவு பெரிய செல்வம் என்பதை உணர்வாருமில்லை.
மனநிறைவுதரும் இவற்றை ஒதுக்கிவிட்டு ஓராயிரம் சினிமாப்படங்கள் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் வீடுகளையே பார்க்கிறோம். அறிவுப்பாதை மூடப்பட்டு அழிவுப்பாதை திறக்கப்பட்டிருக்கிறது.

வாழ்வு வளம்பெற நாம் கடைப்பிடிக்க வேண்டியன நிறையவே இருப்பினும் சுருங்கக் கூறுவதாயின் எது பலமோ அதை அதிகரித்துக் கொள்ளுங்கள். எது பலவீனமோ அதை அகற்றிவிடுங்கள் என்று உங்களுக்கும் சொல்லி உங்களைச் சார்ந்தோருக்கும் சொல்லுங்கள்.
இதனுள்தான் எமது வாழ்க்கையும் அதன் வளமும் தங்கியிருக்கிறது. □

**–சுந்தராம்பாள் பாலச்சந்திரன்**

## தரம்.

வண்டு எந்த தரம்கொண்டு
தேன் அளந்தது
வானம் எந்த தரம்கொண்டு
மழை தந்தது
குழந்தை எந்த தரம்கண்டு
மனிதனானது
குயில் எந்தத் தரம்கண்டு
இசை சிந்தியது
மனிதன்மட்டும் தரமென்று
மாய்ந்து கொள்கிறான்
மயங்கிநின்று வந்தபாதை
மறந்து நிற்கிறான்
தரம் என்று இவன் பாதை
இடறியிருந்தால்
சிரம் நிமிர்ந்து
சட்டைக் கழுத்தை
நிமிர்த்தியிருப்பானா?

**-வேதா இலங்காதிலகம்**

## ஆனந்த நெருக்கடி

தாமதமாகிவிட்டது
பத்தே நிமிடம்தான்

பத்தாயிரம் கிலோமீற்றர் வேகத்தில்
பார்வை பாய்ந்து ஓய்ந்தது

ஏதோ கொதித்தது
அறுபது செல்சியஸ்ஸில்
நான் ஆவியாகிக் கொண்டிருந்தேன்.

அதிரினாலும் வியர்வையும்
பஞ்சமின்றிச் சுரந்தன

பலவீனமான மனிதனாய்
தனிமையில் பேச ஆரம்பித்தேன்

கோபத்தில் கைகளை
விறைப்பாய் விரித்தேன்

அதிர்ச்சியான அடியில்
விரல்கள் வலித்தன

பின்னால் வந்த
அவசரக்காரர்கள்
ஸ்டியரிங்கில்
பற்களபடாமல் நிமிர்ந்தனர்.

சிக்னல்கள்
சிவப்புக்கும் பச்சைக்குமாய்
சடுகுடு ஆடின

குழப்பமாய் கோபமாய்
உணர்வுக் கலவைகள்

காலம் தாமதானதால்
கொஞ்சமாய்
கவலையின் அறிகுறிகள்

வளைவில் திருப்பி
வங்கியின்முன் நிறுத்தினேன்

காப்புறுதிக் கழிவுகளோடு
ஸ்டேட்மெண்ட் சிரித்தது

கண்ணில் பட்ட
மைனஸ்ஸுகளைத்தாண்டி
வரவுகளுக்கு வலை போட்டேன்

எப்பொழுதும் காணும்
சய அடையாளங்கள்
சகஜமாகிப் போயிருந்தன

பாதுகாக்கப்படவேண்டியதாய்
பத்திரப் படுத்தினேன்

கவிழ்ந்த மனத்தோடு
கவிழா தலையோடு
மீண்டும் காரில் உட்கார்ந்தேன்

பெற்றோல் கொதித்து
காசு புகைத்தது

வீதியின் நெருக்கடி
என் நரம்புகளுக்குள்ளும் தெறித்தது.

முன்னே ஒடுங்கிக் கிடந்தது வீதி

இது வாழ்வின் அடையாளமல்ல
ஒரு பகுதிமட்டுமே

மிகுதி ஆனந்தங்களை
அடிப்படையாக்கிப் புறப்பட்டேன்

-மதனி ஜெக்கோனியாஸ்.

**காப்போம்!**

பாடும் மேகங்களே!
தேடும் இராகங்களே!
கூடும் உறவுகளே!
கூடு நமக்கில்லையே

கந்தையானாலும் கசக்கிக்கட்டி
கஞ்சியானாலும் ருசித்துக் குடித்து..
பஞ்சியென்று படுத்ததில்லை
விஞ்சி யுழைத்தோம்

இரக்கமற்றோர் அரக்கத்தனத்தால்
இறக்கையின்றி அகலப் பறந்தோம்
உறக்கமின்றி ஆயிரமிரவு
உணர்வுகளின்றி நகர்ந்தோம்

பெற்றவுறவும் பிறந்த
பொன்னாடும் கத்தியழ
கூலியாய் நாமிங்கு வாழும்
அவலம் நிரந்தரமோ!

சுக்குநூறாய் உடைந்த இனம்
சுற்றுதய்யா பரந்தவெளிதனில்
சத்தியம் தோற்காது நாளும்
சுற்றிவந்து தர்மம்தான்
வெல்லும் நாளை

புரியாமல் விழிக்குமிந்த
புதிய சந்ததிக்கு
புரியும்படி
புகட்டவேண்டும் பாடம்

கூனிக்குறுகி
வாழ்ந்ததுபோதும்
கூனல் நிமிர்த்தி
தாய்மொழி வளர்ப்போம்
கானல் நீராய்
அந்நியம் கலைத்து
பேணிக் காப்போம்
நம் கலையை.

**- இணுவை சக்திதாசன்**
(டென்மார்க்)

(11ம்பக்கத் தொடர்ச்சி - உலகத்......)

ஆண்டு எழுதிய தனது மூலதனம் என்ற நூலின் அமெரிக்க ஐக்கிய குடியரசின் ஒருபகுதியை அடிமைத் தனம் சூழ்ந்திருக்கும்வரை எல்லா சுயேச்சையான தொழிலாளர்இயக்கமும் முடங்கிக் கிடந்தன. தொழிலாளர்களில் ஒருபகுதியினர் கறுப்பு இனம் என முத்திரை இடப்பட்டிருக்கும்வரையும் வெள்ளை இனத் தொழிலாளர்கள் விடுதலை அடைந்துவிட முடியாது. ஆனால் அடிமைத்தனத்தின் அழிவிலிருந்துதான் புதியஉணர்வுகள் பிறந்தன என்று எழுதியிருந்தார்.

1866ஆம் ஆண்டு மேமாதம் முதல்நாள் அமெரிக்காவில் 8மணிநேர வேலை இயக்கப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அன்று நடைபெற்ற சம்பவங்கள் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்புமுனையாக அமைந்தன. அன்று ஊர்வலம் சென்ற தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். அதை எதிர்த்து தொழிலாளர்கள் 3ஆம் 4ஆம் திகதிகளில் தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.

பென்ஸில்வேணியா மாநிலத்தில் 1875ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்க முதலாளிகளால் தூக்கிலிடப் பட்டனர். 1912ஆம் ஆண்டு ஏப்ரலில் சைபீரியாவில் வேலை நிறுத்தம் செய்த தங்கச்சுரங்கத் தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப் பட்டனர். பால்டி மோரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழி லாளர்கள் மீது கண்மூடித்தனமான கொடூரத்தாக்குதல் நடத்தப்பட்டு போராட்டம் அடக்கப்பட்டது. பொஸ்டன்நகரில் மே தினத்தன்று நடைபெற்றஊர்வலத்தினை முறியடிக்க ஊர்வலத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. பலர் உயிரிழந்தனர் மேலும் பலர் காயமுற்றனர். இவையனைத்தையும் உலக நாடுகளில் மே தினத்தன்று இடம் பெற்ற தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதற்கு மேற் கொள்ளப்பட்ட அதி பயங்கர நடவடிக்கைகள். இவற்றைவிட மேலும் பலநிகழ்வுகள் மே தின வரலாற்றில் மறக்க முடியாத அத்தியாயங்களாகப் பதியப்பட்டுள்ளன.

மாற்றி அமைக்கப்பட்ட சர்வதேச காங்கிரஸின் இரண்டாவது மாநாடு 1889ஆம் ஆண்டுபாரிஸில் நடை பெற்றது: இம் மாநாட்டில் வைத்து முதன் முதலாக மே தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. மேமுதல்நாள் என்பது உலகத் தொழிலாளர்கள் தமது அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்களின்கீழ் முக்கிய அரசியல் கோரிக்கையாக எட்டும்மணிநேர வேலை நாளுக்கு குரல் கொடுக்க வேண்டிய தினம் என்று மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. அதற்குமுன்னர் 1884ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம்திகதி சிக்காக்கோவில் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம் என்ற அமைப்பு எடுத்த முடிவே பாரிஸ் தீர்மானத்திற்கு முன்னோடியாக அமைந்தது. 1890ஆம் ஆண்டு பல ஐரோப்பிய நாடுகளில் மேதினம் கொண்டாடப்பட்டது.

அதிகார வர்க்கத்தின் எச்சரிக்கையையும் ஒழுங்கு முறைகளையும் மீறி தொழிலாளர்கள் மேதினத்தைக் கொண்டாடினர். அவற்றில் அமெரிக்காவின் சிக்காக்கோவிலும் நியூயோர்க்கிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இன்று உலகம் முழுவதும் மேமுதல்நாள் உலகத் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின்உரிமைக்காக குரல் எழுப்பும் நாளாகவும் விடுதலைக்குப் போராடும் மக்கள் அடக்குமுறைக்கு எதிராகக் குரல்எழுப்பும் நாளாகவும் மேதினம் அமைந்துள்ளது. இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் மேதினம் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றபோதும் அவை அரசியல் கட்சிகளாலேயே பெரிதும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நாடுகளின் தொழிலாளர்கள் தமது சிறுஉரிமைகளைக் கூடபெரும் போராட்டத்தின் பின்னரே பெற்றுக் கொள்கின்றனர். சிலவேளைகளில் இப்போராட்டங்களின்போது வெறும் உறுதிமொழிகள்மட்டும் வழங்கப்பட்டு தொழிலாளர்கள் ஏமாற்றப்படுகின்றனர். அரசியல்வாதிகளின் பிடியிலிருந்து தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் விடுவிக்கப்பட்டு தொழிற்சங்கங்கள் முற்றுமுழுதாகத் தொழிலாளர்களுக்காக செயலாற்ற முன்வரும் வரை இந்தநாடுகளில் தொழிலாளர் உரிமைகள் மதிக்கப்படப்போவதில்லை. □

## ஆன்மீகம்.

பசியினால் துன்பப் படும்
மனிதனுக்கு ஆன்மீகம் என்ற
சொல்லும் அதன் பொருளும்
எந்தவித பலனும் தராது.
பசித்தவனுக்கு உணவின் வடிவில்
கடவுளைக் கொடுங்கள்
மனத்துன்பம் உள்ளவர்களுக்கு
அமைதியின் வடிவில்
கடவுளைக் கொடுங்கள்
நோயாளிக்கு மருந்தின் வடிவில்
கடவுளைக் கொடுங்கள்
இப்படிப்பட்ட வழியில்தான்
ஓர் மனிதனின் இதயத்தில்
ஆன்மீகம் நுழைய முடியும்.
அவனால் ஆன்மீகத்தை
உணர முடியும்
வேறு எந்தவிதமான முயற்சிகளும்
ஆஸ்திகர்களுக்கு பதிலாக
நாஸ்திகர்களையும் கடவுள்பற்றிய
சந்தேக பிராணிகளையும்தான்
உருவாக்கும்.
ஆன்மீகம் அவசியம் ஆனால்
அதை கொடுக்கும்முறையில்
கொடுத்தால் அது ஆன்மீகம்.

– ரவி செல்லத்துரை

# இணையத் தமிழ் இதழ்களிலிருந்து...

இணையத்தளம்:
**WWW.Thamizham.net**

## தமிழ் வரலாற்று இதழ்களைப் பாதுகாப்போம்

## இணைய அன்போடு அழைக்கிறோம்

பல்வேறு பிரச்சினைகளுக்கிடையிலும் பொருளாதார இழப்புக்களுக்கிடையிலும் தமிழ்ச் சிற்றிதழ்கள் தங்களது வரலாற்றுப்பதிவைச் சிறப்பாகச் செய்துகொண்டுதான் இருக்கின்றன.

பல்வேறு பகுதிகளிலும் தொடங்கப்பட்ட தொடரப்படுகிற இந்த இதழ்கள் அனைவரது பார்வைக்கும் படாமலேயே நின்று விடுகின்றன.
இவ்வகை இதழ்கள் அந்த இதழாளர் வாழும்வரை அவரோடு வாழ்ந்த அவரது மறைவிற்குப்பிறகு அவரது உறவினர்களாலேயே பழைய புத்தகக் கடைக்குத் தூக்கி எறியப் படுகின்றன.
தமிழகத்திலும் வெளிமாநிலங்களிலும் வெளிநாட்டிலும் இவ்வாறு வெளியிடப்படும் இதழ்களைத் திரட்டுவதும் பாதுகாப்பதும்தான் எங்களது முதன்மையான நோக்கமாகும். இந்த நோக்கில் நமது நூலகத்தில் இன்றுவரை 2,533வகையான தமிழ்ச் சிற்றிதழ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இதழ்களைத் திரட்டுவது என்பதைவிட திரட்டியதைப் பாதுகாப்பது என்பதே மிகப் பெரிய வினாக்குறியாக அமைந்தது. தொடர்ந்து சிந்தித்ததின் விளைவால் கணனிவழி குறுந்தகடில் பாதுகாக்கிற முறையானது கண்டறியப்பட்டது. இம்முறையில் தற்பொழுது வானம்பாடி தேனீ இதழ்களைக் குறுந்தகடு ஆக்கியுள்ளேன். தற்பொழுது சரசுவதி இதழ்களைக் குறுந்தகடாக்கிவருகிறேன: இந்தமுறையில் இதழ்களின் தோற்றத்தை அப்படியே அதேவண்ணத்தில் பாதுகாக்க முடியும். அடுத்த தலைமுறையினருக்கு இதழ்களைக் காட்சிப்படுத்துகிற இந்த அரிய முயற்சியில் உங்களையும் இணைத்துக்கொள்ள முன்வருமாறு அன்போடு அழைக்கிறேன்.

திரு. பொள்ளாச்சி நசன்.
(சிற்றிதழ்ச்செய்தி இணையத்தமிழ் இதழாளர்)

## இதயத்தில் ஹைக்கூ

விதவை வானம்
மறுநாளே மறுமணம்
பிறை நிலவு

வெடித்துச் சிதறியது
சிவகாசிச் சிறுவரின்
வாழ்க்கையும் தான்...

நியாயத்தை
விற்கக் கடையா ?
நியாய விலைக் கடை

ஒரே பார்வை
ஓராயிரம் அதிர்வுகள்
என்னுள் நிகழ்ந்தது

என்னைவிட என் பேனா
அதிகம் நேசிக்கிறது அவளை
அவளைப்பற்றியே எழுதுகிறது.


ஒருவனுக்கு ஒருத்தி என
உணர்த்தவந்தது
எய்ட்ஸ்

காவல்துறை அனுமதியின்றி
ஊர்வலம் நடந்தது
எறும்புகள் அணிவகுப்பு

கவிஞர் இரா. இரவி .

www.kavimalar.com

## விரும்பப்படாத வீதிவிபத்துக்கள்



எல்லோருக்குமே ஓர் ஆசை அடிமனதில் நீறுபூத்த நெருப்பாக இருக்கின்றது. அது வேறொன்றுமல்ல. எனக்கு அகால மரணம் வந்துவிடக்கூடாது என்பதுதான் அந்தப் பிரார்த்தனை. இயற்கையாக நோய்வாய்ப்பட்டு இறப்பது என்பது வேறு. அநியாயமாகச் சாவைத் தழுவிக் கொள்வது வேறு. அதிலும் கோரச் சாவைத் தழுவிக் கொள்வது வாழ்க்கையில் எவருக்குமே வரக்கூடாத ஒன்று. ஆனால் நம் கையில்தான் எதுவும் இல்லையே. (18.04.04)

மேலும்..

## பிரச்சினை தருகின்ற பிரமச்சாரியம்



நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் ஏதோவொ...
மாற்றத்தைக் கண்டு... ...றாம்.
இந்த மாற்ற... ...ப்
தவிர்...
விடு...
தாக்க...
வாழ்க்...
செல்ல...
விடுகின் ...ழந்தைப் பருவம்
தாண்ட... ...லை மெல்ல வளர்ந்து

ஏ.ஜே.ஞானேந்திரன்
www.go2tamil.com

# அண்டவெளி ஆய்விற்கு அடிகோலும் தத்துவங்கள்

**-வ.ந.கிரிதரன்-**

நவீன பௌதீகம் என்றதும் நமக்கு ஞாபகத்தில் வருபவர் அல்பேர்ட் ஐன்ஸ்டைன். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவரால் வெளியிடப்பட்ட சார்பியற் தத்துவம் (theory of Ralativity) பற்றிய கட்டுரைகள் பௌதீகவியலின் வரலாற்றிலேயே மாபெரும் புரட்சியை ஏற்படுத்தின. புரட்சியென்றால் சாதாரண புரட்சியல்ல. பௌதிகத்தின் அடித்தளத்தையே அடியோடு மாற்றிவைத்த புரட்சி. இச்சார்பியற் தத்துவமும் சக்திச் சொட்டுப் பௌதிகமும் (Quantum Physics) இன்றைய நவீனபௌதிகத்தின் அடித்தளங்களாகக் கருதப்படுபவை. சார்பியற் தத்துவத்தைப் பொறுத்தவரையில் அது முழுக்க முழுக்க ஐன்ஸ்டைனின் கோட்பாடே.

சக்திச்சொட்டுப் பௌதிகத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும் ஐன்ஸ்டைனையே கருதலாம்.

உண்மையில் ஐன்ஸ்டைனிற்கு நோபல் பரிசு கிடைத்ததே போட்டான்கள் பற்றிய கண்டு பிடிப்பிற்காகத்தான். இக் கண்டுபிடிப்பே சக்திச்சொட்டுப் பௌதிகத்தின் ஆரம்ப வளர்ச்சியாகும் உண்மையில் ஐன்ஸ்டைனிற்கு சார்பியற் தத்துவத்திற்காகவும் இன்னுமொரு முறை நோபல் பரிசு கொடுத்திருக்க வேண்டும்..... இன்னும்.....

**www.Pathivukal.com**



**கவிதை:**

பெண்ணே!
நெருப்பாயும் வேண்டாம்
செருப்பாயும் வேண்டாம்
உனது இருப்பு
உனது விருப்போடு
உனதாய் இருக்கட்டும்

– சந்திரவதனா 8.3.02

**www.selvakumaran.de.**

இந்த இதழ் பூவரசின் முகப்பும் மேற்படி இணையத் தமிழ் இதழிலிருந்து எடுக்கப்பட்டதே.
நன்றி: ஓவியர் மூனா அவர்களுக்கு.

# அரங்கினிலே...

**கவிஞர் த.சு.மணியம் அவர்களின்**

## ஓர் ஆத்மாவின் இராகம்

**கவிதைநூல் வெளியீட்டுவிழா!**

திரு. தசு.மணியம் அவர்களின், ஓர் ஆத்மாவின் இராகம் கவிதைநூல் வெளியீட்டு விழா, ABC வானொலி, பூவரசு சஞ்சிகை ஆகியவற்றின் ஆதரவில் ஜேர்மனி சால்ஸ்கவுசன் நகரில் 10.04.2004 அன்று நடைபெற்றது.

திருதிருமதி சிவலிங்கம் மீனா தம்பதியினர் மங்கள விளக்கேற்றிவைக்க ஆரம்பமான இவ்விழாவில், மண்மீட்புப் போரிலே விதையாகிப்போன மாவீரர்களையும் மக்களையும் நினைவுகூர்ந்து இருநிமிடநேரம் உணர்வு பூர்வமாக அக வணக்கம் செய்யப்பட்டது.

வருகை தந்திருந்த பார்வையாளர்களையும் படைப்பாளர்களையும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியவர்களையும் நன்றிகூர்ந்த திருமதி தாமரா சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.
மூத்தபத்திரிகையாளர் திரு.வீ.ஆர் வரதராஜா தனது தலைமையுரையில் எழுத்தாளர்களின் படைப்புக்கள் எதிர்காலத்தில் எவ்வாறு அமையவேண்டும் என்னும் பொருள்பட உரையாற்றினார்.

ABC வானொலியின் நிர்வாக இயக்குனர் திரு.நவா, திருமதி நவாஜோதி, மூத்த கலைஞரும் நாடகாசிரியருமான திரு. முகத்தார் யேசுரட்ணம், மண்வாசனைக் கவிஞர் திரு.விக்கி நவரட்ணம் ஆகியோரது வாழ்த்துச் செய்திகள் அவர்களது குரல்களிலேயே ஒலிப்பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பேழைமூலம் விழாவில் ஒலிபரப்பானது.

தொடர்ந்து நூல் அறிமுகவுரையை ABC வானொலியில் கவிஞர்கள் சங்கமம், ஏடும் எழுத்தாணியும், இலக்கியத்தென்றல் போன்ற பல நிகழ்ச்சிகளைத்தொகுத்து வழங்கும் கவிஞர் திரு.வண்ணை தெய்வம் அவர்கள் வழங்கியதோடு தமது அன்புப் பரிசாக கவிஞர் திரு.தசு.மணியம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்

நூலின் முதற்பிரதியை திரு.தசு.மணியம்அவர்களிடமிருந்து திரு.செல்லத்துரை இந்திரகுமார் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை நிகழ்த்திய பூவரசு சஞ்சிகை ஆசிரியர், இலக்கியச்செம்மல் திரு. இந்துமகேஷ் கவிஞரின் இரு கவிதைகளுக்கு ஆய்வுரை வழங்கியதோடு, புலம்பெயர் இலக்கியம் அண்மைக்காலமாக முன்னேற்றம் காண்பது மகிழ்வைத்தருகிறது என்றும் குறிப்பிட்டார்.

ஈழம் பத்திரிகை ஆசிரியர் திரு இராஜகருணா, தமிழர் குரல் வானொலி நிறுவனர் திரு.சிவநேசன், கவிஞர் மட்டுவில் ஞானக்குமாரன், எழுத்தாளர் திருமதி சாந்தினி வரதராஜன், திரு.சு.சிவலிங்கம் ஆகியோர் கவிஞரை வாழ்த்தியதோடு நூலின் சிறப்புப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். அடுத்து, வந்திருந்த வாழ்த்து மடல்கள் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டு நூலாசிரியரிடம் கையளிக்கப்பட்டன.

திரு. முகத்தார் யேசுரத்தினம் அவர்களால் கவிமணி என்றும், சிந்தனைச்செல்வர் எழிலன் அவர்களால் பாமைந்தர் என்றும், உலகத்தமிழர் நலன்புரி ஒன்றியம் பாரீஸ் தலைமையகத்தால் வரகவி தமிழ்சுரக்கும் மணியம் எனவும் பட்டங்கள் வழங்கிய வாழ்த்து மடல்களும் கவிஞரிடம் வழங்கப்பட்டன.

நூலின் முழுமையான விமர்சன உரையை ABC வானொலிக் கலைஞர் திரு. கனகசபை அரியரத்தினம் மிக அழகுற எளிமையான வார்த்தைப் பிரயோகங்களால் நிகழ்த்திய விமர்சனம் படைப்பாளிகளின் பாராட்டைப் பெற்றதோடு சிந்திக்கவும் வைத்தது.

உரைகளின் இடையே இளையோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. செல்வி றெஜினா தவராஜா அவர்களின் பரதநாட்டியமும், செல்வி பிரசாந்தி சுப்பிரமணியம் தனது சக ஜெர்மன்மாணவிகளான பியா, ஜனா, வியோலாவுடன் இணைந்து ஆங்கிலப் பாடலொன்றுக்கு அபிநயித்த நடனமும், திருமதி நவாஜோதியின் ஒலிப்பேழையிலிருந்து அன்னைமொழியாம் தமிழ்மொழியை என்னும் பாடலுக்கு ஐந்தே வயது நிரம்பிய றஞ்சனா தவராஜாவின் நடனமும், இந்திரகுமார் நீதுசன் அபிநயித்த பாபா நடனமும் பார்வையாளர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது.

விழாவில் கலந்து சிறப்பித்த இளங்கலைஞர்களுக்கு திரு.த.சு.மணியம் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தார். இறுதியாக இசைக்கலைஞர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் மெல்லிசைப் பாடலைத் தொடர்ந்து நூலாசிரியர் திரு.த.சு.மணியம்அவர்கள் ஏற்புரையை வழங்கினார். இந்த விழாவின் ஒருங்கிணைப்பாளர் திரு. ரவிமாஸ்ரர் நன்றியுரையை வழங்கியதுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

-பார்வையாளன்.

## நமது நூலகம்.

தூய தமிழ்மணங் கமழத்
துலங்கும் நம் கம்பனிவன்
நான்காண்டாய்த் தன்பணியை
நலமாகத் தொடர்கின்றான்..
~ இந்துமகேஷ்




கவிஞர் கி.பாரதிதாசன் அவர்களை
ஆசிரியராகக்கொண்டு
பிரான்சிலிருந்து வெளிவரும் திங்களிதழ்.

தொடர்புகளுக்கு:
Poete K.Bharathidasan
6 Rue Paul Langevin
95140 Garges Les Gonesse
France.

கவிதை புனைவோரைக்
கண்டறிந்து களமமைத்து
சுடரும் கவிதைகளால்
ஒளிவழங்கும் கலைவிளக்கு!
-இந்துமகேஷ்




கவிதாமணி விக்னா பாக்கியநாதன் பீ.ஏ.
அவர்களை ஆசிரியராகக் கொண்டு
இருதிங்கள் ஓரிதழாக வெளிவரும்
கவிதையிதழ்

தொடர்புகளுக்கு:
S.Packiyanathan
Droote 19
44328 Dortmund
Germany.

*Poovarasu Kultur und Literatur Organisation e.V.*

வெளிவந்துவிட்டது.

## சிவத்தமிழ்

**(ஆன்மீகக் காலாண்டிதழ்)**




**அன்பே சிவம்! சிவமே தமிழ்!**

**தொடர்புகளுக்கு:**

Dr.M.K.Sivakumaran B.F.A
Postfach 2765
58477 Lüdenscheid
Germany.